# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்

**இந்தியாவில், உள்ளாட்சி அரசாங்கத்தில் 1, 20,000க்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகளும் 86,000 பெண் அலுவலர்களும் உள்ளனர். அவர்களுக்கு அதிக அதிகாரங்களை அளிப்பது, பொருளாதார சமத்துவமின்மையையும் வறுமையையும் எதிர்த்துப் போராடுவதற்கான சிறந்த வழிகளுள் ஒன்றாகும்.**



www.youthkiawaaz.com

# கிராம சபைகளுக்கு ஒரு ஊக்க மருந்து

**வேதாந்தா பாக்ஸைட் சுரங்கம் மத உரிமைகளுக்குப் பாதகமாக இருக்கிறதா என்பதைக் கண்டறியுமாறு கிராம சபைகளை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.**

**– குமார் சம்பவ் ஸ்ரீ வாஸ்தவா**


www.downtoearth.org.in

ஏப்ரல் 18 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஒரு ஆணை ஒடிசா மாநிலத்தில் வேதாந்தா நிறுவனம் தொடங்க உள்ள பாக்ஸைட் (அலுமினியத்திற்கான கனிமம்) சுரங்கத் திட்டத்தின் எதிர்காலத்தை மக்களின் கையில் ஒப்படைத்துள்ளது. நியாம்கிரீ மலைப் பகுதிகளும் சுற்றுப் புறத்திலும் உள்ள பழங்குடி மக்களுக்கு அந்த சுரங்கங்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ள பகுதியில் மதம் சார்ந்த உரிமைகள் இருக்கின்றனவா என்பதை முடிவு செய்யுமாறு ராய்கடா, காலஹந்தி மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டுள்ள கிராமசபைகளை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. “அவர்களது உரிமைகள் பராமரிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும்,” என்று நீதிமன்றம் கூறியுள்ளது. ஒடிசா சுரங்கக் கழகமும் (OMC), வேதாந்தா நிறுவனத்தின் இந்தியக் கிளையாகிய ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமும், நியாம்கிரீ மலைப் பகுதிக்கு அருகில் உள்ள லாஞ்ஜிகாக் பகுதியில் உள்ள வேதாந்தா அலுமினிய சுத்திகரிப்பு நிலையத்திற்கு தேவையான பாக்ஸைட் கனிமத்தை நியாம்கிரீ வனப்பகுதியில் உள்ள 666 ஹெக்டேர் நிலப்பரப்பிலிருந்து தோண்டி எடுக்கத் திட்டமிட்டுள்ளன. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் முதலில் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கிவிட்டது என்றாலும், பின்னர் 2010ல் அந்த அனுமதியை விலக்கிக்கொண்டது. வனப்பாதுகாப்புச் சட்டத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தையும் வன உரிமைகள் சட்டத்தையும் அந்தத் திட்டம் மீறுகிறது என்று அமைச்சகம் கூறியுள்ளது. மேலும், டோங்கிரியா கோந்த், குட்டியா காந்தா என்ற இரண்டு பழங்குடி சமூகங்களின் மத உரிமைகளை இந்தத் திட்டம் மீறுகிறது என்றும் அமைச்சகம் காரணம் கூறியுள்ளது. இந்த இரு சமூகங்களின் மக்களும் நியாம்கிரீ மலையின் உச்சிப்பகுதியை தங்களது தெய்வமாக வழிபடுகின்றனர். இந்த முடிவை எதிர்த்து 2011ல் OMC உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

உச்சநீதிமன்றம் தனது ஆணையில், கிராம சபைகள் பல தனி மனிதர்களின் புகார்களையும் சமூகப் பிரச்சனைகளையும் வன உரிமைச் சட்டத்தின் கீழ் தீர்த்து வைத்துள்ளன என்ற போதிலும் மத உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனை கிராம சபைகளின் முன், முறையாக வைக்கப்படவில்லை என்று கூறியுள்ளது. கிராம சபைகள் மூன்று மாதங்களில், மத உரிமைகள் சம்பந்தமான தமது கருத்துகளைச் சொல்லும். அதனடிப்படையில் இத்திட்டத்திற்கான இரண்டாம் கட்ட ஒப்புதலை வழங்குவது குறித்து அமைச்சகம் முடிவு செய்யும். கிராம

சபைகள் எடுக்கக்கூடிய முடிவுகளில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோ, மாநில அரசோ, மத்திய அரசோ செல்வாக்கு செலுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள ஒரு நீதித்துறை அதிகாரியின் முன்னிலையில் கிராம சபை விவாதங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விதி மீறல்களை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வேதாந்தா பாரிக் கூறுகிறார். இந்த வழக்கில் பழங்குடி மக்களுக்காக வாதாடியவர் அவர். "நீதிமன்றம் கூறியுள்ள அனைத்து விஷயங்களும் சட்டத்தில் இருக்கின்றன. ஆனால், திட்டத்தை நடத்த விரும்புகிற நிறுவனங்கள் பழங்குடி மக்களின் மத உரிமைகளை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அத்தகைய உரிமை இருக்கிறதா இல்லையா என்பது பற்றி முடிவு செய்ய வேண்டியது கிராம சபைகள்தான். திட்ட நிறுவனங்களோ, மாநில அரசோ, மத்திய அமைச்சகமோ அல்ல என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது," என்றும் அவர் கூறுகிறார்.

## கிராம சபைகளின் அதிகாரத்தைக் கீழிரக்க முயன்ற மத்திய அரசுக்கு ஒரு அடியாக வந்துள்ளது இந்தத் தீர்ப்பு

அலுமினிய சுத்திகரிப்பு நிலையம் மேற்கொள்ள வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கு வன நிலங்கள் எதுவும் பயன்படுத்தப்பட மாட்டாது என்ற தவறான தகவலின் அடிப்படையில்தான் வேதாந்தா நிறுவனம் சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்றது. ஆனால், அமைச்சகத்தின் ஒப்புதல் பெறாமலே சுத்திகரிப்பு நிலைய உற்பத்தித் திறனை 6 மடங்காக அந்த நிறுவனம் விரிவுபடுத்திக்கொண்டது. சுரங்கத் திட்டம் குறித்து முடிவெடுக்கிறபோது, நிறுவனம் மேற்கொண்ட சரிப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சகம் பரிசீலிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

### உறுதிப்படுத்தப்பட்ட கிராம சபை அதிகாரம்:

"இயற்கையோடு இணைந்து வாழ்கிற பழங்குடி மக்களின் ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையை இந்தத் தீர்ப்பு அங்கீகரிக்கிறது," என்று உச்சநீதிமன்ற வழக்கறிஞர் சஞ்சய் உச்சநீதிமன்றத்திடம் ஒரு முக்கியப் பிரச்சனை முன் வைக்கப்படாததன் காரணமாக, இந்தப் பிரச்சனையை கிராம சபைகளிடம் ஒப்படைத்துள்ள–தன் மூலம், அவற்றை ஒரு அரசமைப்பு சாசனம் சார்ந்த, சட்டப்பூர்வமான, அமைச்சகத்துக்கு சமமான நிலையில் உள்ள ஒரு அதிகார அமைப்பாக உச்சநீதிமன்றம் கருதி நடத்தியுள்ளது என்கிறார் சங்கர் கோபால கிருஷ்ணன். உயிர் வாழ்தல் மற்றும் கவுரவத்திற்கான பிரச்சார அமைப்பைச் சேர்ந்தவர் இவர்.

கிராம சபைகளின் அதிகாரத்தைக் கீழிறக்க அண்மைக் காலத்தில் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளின் மீது இந்தத் தீர்ப்பு ஒரு அடியாக விழுந்துள்ளது என்று ஆய்வாளர்கள் கூறகிறார்கள். பயன்பாட்டிற்கு வன நிலங்கள் தேவைப்படுகிற அனைத்துத் திட்டங்களுக்கும் கிராமசபைகளின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று 2009ல் ஆண்டில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் பிறப்பித்த ஒரு ஆணை கூறுகிறது. ஆனால், அமைச்சகம் பின்னர் தனது நிலைபாட்டை மாற்றிக்கொண்டது. பிப்ரவரி 15ல் நடைபெற்ற நியாம்கிரீ சுரங்க வழக்கு விசாரணையின்போது, ஏராளமான மக்கள் இடம் பெயர வேண்டிய நிலைமை ஏற்படுத்துகிற மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிற பிரச்சனைகளில்தான் மக்களின் (கிராம சபைகளின்) ஒப்புதல் தேவை என்று அமைச்சகம் நீதிமன்றத்திடம் கூறியது. நாட்டின் முதலீட்டுச் சூழல் பற்றி பிரதமர் அலுவலகம் சென்றாண்டு வெளியிட்ட ஒரு அறிக்கையிலும்கூட வனப் பயன்பாடு தொடர்பாக கிராம சபைகளின் ஒப்புதல் தேவை என்ற விதியை நீக்கிவிடலாம் என்று கூறப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதைத் தொடர்ந்து ரயில் தடங்கள், சாலைகள், மின்சாரக் கம்பி இணைப்புகள் போன்ற தொடர்ச்சியான திட்டங்களுக்கு கிராம சபை ஒப்புதல் தேவை என்பதிலிருந்து அமைச்சகம் விலக்கு அளித்தது.

பல்வேறு சுரங்கத் திட்டங்களில் இந்தத் தீர்ப்பு தாக்கம் செலுத்தக் கூடும். OMC போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு எந்த ஒரு பகுதியையும் ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்று நீதிமன்றம் கூறுகிறது என்ற போதிலும், சமூகங்களின் மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது. "மத உரிமை அல்லாத மற்ற உரிமைகள் குறித்து நீதிமன்ற ஆணை எதுவும் கூறவில்லை.

ஆயினும், அந்த உரிமைகளும் சட்டப் பூர்வமானவைதான், அவற்றை அமைச்சகத்தால் தள்ளுபடி செய்துவிட முடியாது," என்கிறார் கோபால கிருணணன்.

**ஆதாரம்:**
**May 1-15, 2013 Down To Earth**

# பெண் குழந்தையின் உரிமைகளும் உயிர்வாழ்வும் – ஊராட்சிமன்றங்களின் பங்கு

– பித்யூத் மொஹாந்தி, பிஜயலட்சுமி

இந்தியாவைப் போன்றதொரு ஆணாதிக்க சமுதாய அமைப்பில், பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளில் பெண்களின் மதிப்பைக் குறைக்கிற தத்துவமே ஆளுமை செலுத்தி வந்திருக்கிறது. இங்கு சமூக ஒழுங்கு அமைப்புகள் இத்தகைய கருத்துகளுக்கு சமூகமயமாக்குவதன் மூலமாகவும் சடங்குகளின் மூலமாகவும் புராணக் கதைகள் மூலமாகவும் இதர வழிகளிலும் அங்கீகாரம் வழங்குகின்றன. பெண்களைப் பொறுத்தவரையில் பெண் குழந்தையானாலும், பெண் குழந்தை மட்டுமே உள்ள பெண்களானாலும், விதவைப் பெண்களானாலும் மோசமாகவே நடத்தப்படுகிறார்கள். பெற்றோர் / கணவன் வீட்டார் அல்லது மற்ற ரத்த சம்பந்தமுள்ள உறவினர்கள் நடந்துகொள்ளும் முறைகள், பெண் குழந்தைகளையும் பெண் குழந்தை மட்டுமே உள்ள பெண்களையும் விதவைப் பெண்களையும் மதிப்புக் குறைவானவர்களாகவே, ஒதுக்கி வைக்கக் கூடியவர்களாகவே பார்க்கின்றன. இத்தகைய பாகுபாட்டிற்கான காரணங்கள் பொருளாதார அம்சங்களோடும் பண்பாட்டுக் கூறுகளோடும் கலந்திருக்கின்றன. இன்றைய நூற்றாண்டில் இந்திய சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் விகிதம் குறைந்து வருகிறது. இந்தியா ஒரு “வளர்ந்து வரும் பொருளாதார” நாடாக இருந்தபோதிலும் இதுதான் நிலைமை. வேடிக்கை என்னவென்றால், ஹரியானா, பஞ்சாப் போன்ற வளமான மாநிலங்கள் கூட, குறிப்பாக 0–6 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த பாலின விகிதத்தையே கொண்டுள்ளன. மேலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான விகிதத்தின் இடைவெளி சுருங்கி வருகிறது என்ற போதிலும் கூட, சுகாதாரம், கல்வி போன்ற விஷயங்களில் பெண் குழந்தைகள் பாகுபாடுகளையே சந்திக்கிறார்கள்.

பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிரான இத்தகைய கட்டமைப்பு சார்ந்த பாகுபாடுகளை சரிப்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசு மத்திய மாநில மட்டங்களில் பெண் குழந்தைகளுக்கு சாதகமான பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டங்கள் பெண் குழந்தையின் உயிர், வாழ்க்கை, வளர்ப்பு ஆகியவை தொடர்பாகக் கொண்டுவரப்பட்டன. அத்துடன், அரசியல் ரீதியாக முடிவெடுக்கும் நடைமுறையில் பெண்களுக்குப் பங்கில்லை என்ற நிலைமையை மாற்றுவதற்காக, குறிப்பாக உள்ளூர் மட்டத்தில் பெண்களுக்கு ஒரு அரசியல் வெளி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. அதேபோல், ஏழைப் பெண்களுக்கு ஓரளவு கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்வதற்காக மகளிர் குழுக்களுக்கான குறுங்கடன் உதவித் திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்தகைய சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் கூட பெண் குழந்தைகளின் விதி என்னவோ தீர்மானிக்கப்பட்டதாகவே இருக்கிறது.

இத்தகைய கவலை தரும் சூழலில், மக்களின் வாழ்நிலை சார்ந்த இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண, மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 10 லட்சத்திற்கு மேற்பட்ட பெண்களால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. சமூகத் தீங்குகள் எல்லாவற்றிற்கும் தீர்வு என்ன என்று தேடுவதற்கு முன்பாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் இன்னொரு வகையான கட்டமைப்பு நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். அதுதான் உள்ளாட்சிகளுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்கிற நிலைமை. உதாரணமாக ஊராட்சிகளிடம் சுகாதாரம், குடிநீர், உணவுப் பாதுகாப்பு, துப்புரவு, ஊட்டச்சத்தின்மை ஆகிய 29 மேம்பாட்டுத் திட்டங்கள் தரப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களில் பொதுவாகக் குழந்தைகள்தான், குறிப்பாகப் பெண் குழந்தைகள்தான், பாதிக்கப்படுகிறார்கள். இருந்தபோதிலும் உள்ளாட்சி அமைப்பு முறையில் பெண் குழந்தைகள் கண்ணுக்குத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் வாக்காளர்கள் இல்லை அல்லவா! அதே நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது மகளிர் மற்றும் குழந்தை மேம்பாடு போன்ற அமைச்சகங்களும், திட்டக்குழுவும், பொருளாதார ஆய்வு அமைப்பும் குழந்தைகள் தொடர்பாக உள்ளாட்சிகளின் பங்களிப்பை வரையறுக்க முயன்று வந்துள்ளன. இருந்தபோதிலும், இந்தத் திட்டங்கள் அனைத்தும் நெருக்கடி சமாளிப்பு

ஏற்பாடுகளாகத்தான் அமலாக்கப்படுகின்றன என்பதால், பல்வேறு சமூகத் துறை சார்ந்த திட்டங்களை நிர்வகிப்பது அல்லது கண்காணிப்பது என்பதைத் தவிர வேறு எவ்விதமான பங்களிப்பும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இல்லை செய்ய முடிவதில்லை. இதை கவனத்தில் கொள்வதா வேண்டாமா என்பது, திட்டங்கள் சார்ந்த செயலமைப்புகளின் முன்னுரிமை என்ற போதிலும் கூட இந்த நிலைமைதான் நீடிக்கிறது.

**அட்டவணை 1**

**குழந்தைப் பாலின விகிதம் (0–6 வயதுப் பிரிவு ஆண் குழந்தைகளில் ஒவ்வொரு 1000 ஆண் குழந்தைகளுக்கும் 0–6 வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை) குடியிருப்போர் கணக்கு, இந்தியா, 1981 2011**

| | மொத்தம் | கிராமம் | நகரம் |
|---|---|---|---|
| மக்கள் தொகை கணக்கெடுப்பு 1981 | 966 | 964 | 973 |
| மக்கள் தொகை கணக்கெடுப்பு 1991 | 945 | 948 | 935 |
| மக்கள் தொகை கணக்கெடுப்பு 2001 | 927 | 934 | 908 |
| மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 | 914 | 919 | 902 |

*ஆதாரம்: இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் உரிய ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.*

பெண் குழந்தைகளுக்கு கல்வியை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய அக்கறைகளில் ஒன்று. ஆனால், பெண் குழந்தைகளைப் பாகுபடுத்துகிற சமூகப் பொருளாதார நடைமுறைகள் தொடர்ந்து கல்வித்துறைக்கு சவாலாக இருந்து வருகின்றன. குடும்பங்களுக்குள்ளேயே உள்ள பாகுபாடுகள், பெண் குழந்தைகள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது குழந்தைத் திருமணம் போன்றவை பெண் குழந்தைகளின் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து பாதிக்கின்றன. தொடர்ந்து பாதித்துக்கொண்டிருக்கின்ற நிலையில், அவர்களது கல்வி முன்னேற்றத்தை நோக்கமாகக்கொண்ட திட்டங்களாலும், செயல்பாடுகளாலும் மிகக் குறைந்த பலன்கள்தான் ஏற்பட்டுள்ளன. பெண் குழந்தைகளின் எழுத்தறிவு மட்டங்கள் மேம்பட்டுள்ளன என்பது உண்மைதான் என்ற போதிலும், கல்வியில் பாலின இடைவெளி என்பது நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

## உள்ளாட்சிகளில் பெண்கள்

இந்தியப் பெண்களின் நிலை குறித்த 'சமத்துவத்தை நோக்கி' (1974) என்ற அறிக்கை, அவர்களது நிலை மிகத் தாழ்வாக உள்ளது என்று கூறியது. ஆனாலும், உள்ளாட்சி மட்டத்தில் கூட பெண்களுக்கு இடஒதுக்கீடு தேவை என்ற கருத்தை அந்த அறிக்கை நிராகரித்தது. அந்த அறிக்கையைத் தயாரித்த குழுவின் இரண்டு முக்கிய உறுப்பினர்கள் தங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை என்ற குறிப்பை கொடுத்தனர் என்ற போதிலும் குழுவின் அறிக்கை பெண்களின் இடஒதுக்கீடு கோரிக்கையை தள்ளுபடி செய்தது. ஆனால், பின்னர், 1988 – 2000 காலகட்டத்திற்கான தேசிய தொலைநோக்குத் திட்ட அறிக்கை, உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்க பரிந்துரைத்தது. எனினும், 1993ல் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு சாசனத்திற்கான 73வது சட்டத்திருத்தம், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கிற்கும் குறையாத அளவிற்கு இடங்களை ஒதுக்கீடு செய்தது. அண்மையில் இது 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதன் விளைவாக வேர்மட்ட நிர்வாகங்களில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுத் தளத்தில் பல பெண்களின் இந்தப் பங்கேற்பு ஒரு வகையான சமூக அசைவுக்கு இட்டுச் சென்றுள்ளது. மாதர் இயக்க வரலாற்றில் இது முன் எப்போதும் நடந்திராததாகும். ஒரு விதத்தில் இது நாட்டின் விடுதலை போராட்டத்தையே கூட விஞ்சிவிட்டது.

1993க்குப் பின் 20 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பெண் தலைவர்களில் 85 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் முதல் முறையாக வந்தவர்களாகவே உள்ளனர் (ஜாயல் 2008). இரண்டாவதாக, தேர்தலில் நிற்கும் பல பெண்கள் உயர்மட்ட அரசியல் தலைவர்களின், நில உடமையாளர்களின், குடும்பத்தில் உள்ள ஆண் உறவினர்களின் விருப்பத்திற்கு இணங்கவே அதைச் செய்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பல பெண்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட வருவதில்லை. இந்தப் பின்னணியிலும் கூட பல இடங்களில், இதர மாதர் அமைப்புகளின் ஆதரவோடு, பெண் தலைவர்கள் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளனர் (டஃலோ மற்றும் சட்டோபத்யா – 2004), (மொஹந்தி – 2012). ஆயினும், மற்ற இடங்களில், பொதுவாக உள்ளாட்சிகளின் பெண் உறுப்பினர்கள், குறிப்பாக தலித் பெண்கள், "ஆள் பிடித்தல்" காரணமாக சரியாக செயல்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள் (பரதன் - 2010, PAI – 2004). இந்த செயல்பாட்டின்மைக்குக்

காரணம் பெண்கள் மீது விழுந்துள்ள இரட்டைச் சுமைகளாகும். தங்களது வீடுகளில் அவர்கள் குழந்தை வளர்ப்பு, முதியவர்களையும் செயல்பட முடியாதவர்களையும் கவனித்துக் கொள்ளுதல் மற்றும் இதர பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. தண்ணீர், விறகு போன்றவற்றைத் தேடி அவர்கள் வெகுதொலைவு செல்ல வேண்டியிருக்கிறது. இவ்வாறு வீட்டுப் பணிகளில் அவர்கள் செலவிடுகிற நேரம் மிக அதிகமாகும். பெண்களுக்கு அரசாங்கம் இடஒதுக்கீடு வழங்கியிருக்கிறதே தவிர, அவர்களது சுமையைக் குறைப்பதற்கான வேறு வசதிகள் எதையும் செய்து கொடுக்கவில்லை. எவ்வித அங்கீகாரமும் இல்லாத வீட்டு வேலைகளை முடித்த பிறகுதான் அவர்கள் உள்ளாட்சிப் பணிகளுக்கு குறைந்த நேரத்தையே ஒதுக்க முடிகிறது. அதன் பிறகல்லவா அவர்கள் உள்ளாட்சிகளின் செயல்முறைகள் குறித்து அவர்கள் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அண்மையில், உலக அளவிலேயே வேலைகளில் பெண்களின் விகிதம் குறைந்து வருகிறது என்றும் வீட்டுப் பொறுப்புகளில் அவர்களுக்கு ஆதரவு கிடைக்காததே இதற்குக் காரணம் என்றும் உலக தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) தெரிவித்துள்ளது. இந்நிலையில், பல நேரங்களில், இளம் தாய்மார்கள் தங்களது குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக வேலையை விட்டுவிடுகிறார்கள். சில நேரங்களில் குழந்தையே தேவையில்லை என்ற முடிவுக்கும் பெண்கள் வருகிறார்கள் (பானர்ஜி – 2013). இதுமட்டுமல்லாமல், பெண் குழந்தைகளுக்கு எதிரான வெறுப்பு பெண்களுக்கே கூட இருக்கிறது. ஆணாதிக்க மதிப்பீடுகளின் தாக்கமே இதற்குக் காரணம்.

உள்ளாட்சி உறுப்பினர்களாக உள்ள தலித் பெண்கள் இன்னொரு வகையான ஒடுக்குமுறைக்கு உள்ளாகிறார்கள். உயர்சாதி ஆணாதிக்கமே அந்த ஒடுக்குமுறை. உயர்சாதிகளைச் சேர்ந்த பெரிய ஆட்கள், தலித் பெண்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முயல்கிறார்கள். இதனால், அந்தப் பெண் தலைவர்களால் தங்களது பதவிக் காலத்தில் எதையுமே செய்ய முடியாமல் போகிறது. குழந்தைகளின் ஊட்டச்சத்தின்மைக்கு வறுமை நிலையை மட்டுமே காரணமாகக் கூறிவிட முடியாது என்று ராதா கிருஷ்ணா (2010) போன்ற பல வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதில் அறியாமைக்கும் சமூக நடைமுறைகளுக்கும் கூட பங்கு இருக்கிறது. 10 லட்சம் பெண் தலைவர்களை உருவாக்குவது என்ற எண்ணத்தின் நோக்கம் அறியாமையையும் சமூக நடைமுறைகளையும் மாற்றுவதுதான் என்ற போதிலும் கூட, இதில் இந்திய அனுபவம் பரிதாபகரமாக தோல்வியடைந்திருக்கிறது. இத்தகைய நெருக்கடியோடு இணைந்துதான், இந்த பரிசோதனைக்கு இன்னொரு வகையான அமைப்பு சார்ந்த நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. அது என்ன என்பதை இனி நாம் காண்போம்.

## நமது உள்ளாட்சிகளை வாட்டும் நோய் எது ?

கொள்கைகள் தில்லியில் உள்ள மத்திய அரசால் உருவாக்கப்படுகின்றன, மேலிருந்து கீழ் வரை செயல்படுத்தப்படுகின்றன என்பதால்தான் வளர்ச்சியின் ஆதாயங்கள் ஏழைகளிலும் ஏழைகளாக இருப்பவர்களை சென்றடையவில்லை என்று கொள்கைகளை வகுப்போர் உணர்ந்துள்ளனர். ஆகவேதான், உள்ளாட்சி அமைப்புகளைத் தொடங்கப்பட்டது என முடிவு செய்யப்பட்டது. உள்ளாட்சி அமைப்பு கொண்டுவரப்படுவதன் காரணமாக, நிர்வாகம் என்பது கிராம மக்களின் வாசல்களுக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்தந்த பகுதிகளின் தேவைகளுக்கு ஏற்ப ஊராட்சிமன்றங்களே திட்டமிடும், செயல்படுத்தும், வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும், ஊரின் பெரியவர்கள் அனைவரையும் கொண்ட கிராமசபைகள் திட்டமிடுவதில் பங்கேற்கும், அதன் மூலம் குழந்தைகள் உள்பட அனைவரது நலன்களும் வருடாந்திர திட்டமிடுதலில் பரதிபலிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஊராட்சி உறுப்பினர்களுக்கு தங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான திறனும் உண்மையான அதிகாரமும் இல்லை.

மேலும், இந்த அரசியல் ரீதியான உள்ளாட்சி அமைப்புகள் தங்களது சொந்த நிதியாதாரங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு போதிய அதிகாரமற்றவையாக இருக்கின்றன. மத்திய மாநில அரசுகளின் நிதியாதாரங்களைச் சார்ந்தே இவை செயல்பட வேண்டியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படும் நிதியாதாரங்கள் பெரும்பாலும் திட்டங்களைச் சார்ந்தவையாகவே உள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலர், இளநிலைப் பொறியாளர் திட்ட அலுவலர், மாவட்ட ஆட்சியர் போன்ற அதிகாரிகளின் ஆணைகளுக்கு உட்பட்டே உள்ளாட்சிகள் அந்த நிதியை செலவிட வேண்டியுள்ளது. உயர்மட்ட அரசியல் தலைவர்கள் கூட இந்த வேர்மட்டத் தலைவர்களுக்கு இணக்கமாக இல்லை.

இவ்வாறாக உள்ளாட்சிகளுக்கு துப்புரவு, குடிநீர், உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய பணிகளை செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமான பொறுப்புகள் தரப்பட்டுள்ளன. ஆனால், நடைமுறையில்

உள்ளாட்சிகள் வெறும் கண்காணிப்பு அமைப்புகளாக மட்டுமே மாற்றப்பட்டுள்ளன. 73வது சட்டத்திருத்தத்தில் குழந்தைகள் குறித்து எங்கேயும் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பிறப்பு இறப்பை பதிவு செய்தல் தொடர்பான பகுதிகள் மட்டுமே குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் பொதுவாகக் குழந்தைகள், குறிப்பாகப் பெண் குழந்தைகள், சுகாதாரம், கல்வி, உணவு உத்தரவாதம் போன்றவற்றிற்கான வாய்ப்புகளில் பாகுபடுத்தப்படுகிறார்கள். பாதுகாப்பைப் பொறுத்தவரையில் பெண் குழந்தைகள் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடியவர்களாக இருக்கிறார்கள். முக்கிய விவரங்கள் பதிவு தொடர்பாக பல்வேறு மாநிலங்களின் பதிவு அமைப்புகள் அளித்துள்ள விவரங்களை நாங்கள் ஆய்வு செய்தோம். 28 மாநிலங்களில் 14 மாநிலங்கள் பிறப்பு – இறப்பு பதிவு பொறுப்பை உள்ளாட்சிகளிடம் ஒப்படைத்துள்ளன. மற்ற மாநிலங்களில் இதில் உள்ளாட்சிகளுக்கு எவ்வித பங்கும் இல்லை. பெண் சிசு மரண விகிதத்தை குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக 2005ம் ஆண்டில், பெண்கள் கருவுருவதைப் பதிவு செய்யும் பொறுப்பு 'அக்ரெடிட்டட் சோசியல் ஹெல்த் ஆக்டிவிஸ்ட் (ஆஷா)' அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. கிராம ஊராட்சிகளில் பிறப்புப் பதிவை முழுமையாக இந்த அமைப்பே மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 2013ம் ஆண்டுக்கான இந்திய மாதிரி ஆய்வு (ஐஎஸ்எஸ்) அறிக்கையில் பிறப்புப் பதிவுகளை ஆஷா கவனித்துக்கொள்கிறது என்று ஊராட்சிப் பெண் பிரதிநிதிகள் யாரும் தெரிவிக்கவில்லை.

18 மாநிலங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 400 பெண் பிரதிநிதிகளிடம் நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம் (மொஹந்தி – 2013). ஆஷா மட்டுமல்லாமல் தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (என்ஆர்எச்எம்) தொடர்பான தகவல்களும் சீரற்றதாகவே உள்ளன. ஹரியானா மாநிலத்தின் பெண் பிரதிநிதிகளில் 87 சதவீதத்தினருக்கு இந்தத் திட்டம் பற்றி எதுவும் தெரியவில்லை. தேசிய அளவில் 50 சதவீத பெண் பிரதிநிதிகள் இதுபற்றி அறிந்திருக்கவில்லை. சுகாதாரப் பணிகளை செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சிகளின் பங்கு என்று வருகிறபோது, சுகாதாரம் மற்றும் துப்புரவுக்கான நிலைக்குழுவில் ஊராட்சி உறுப்பினர்களும் சுய உதவிக் குழுவினரும் அங்கம் வகிப்பார்கள், அனைத்து சுகாதாரப் பிரச்சனைகளிலும் அவர்கள் முடிவெடுப்பார்கள் என்று தெரியவருகிறது. ஆனால், நிலைக்குழுவின் பணிகள் குறித்து விசாரித்தபோது, பீஹார் மாநிலப் பிரதிநிதிகளில் 83 சதவீதத்தினர் தங்கள் பகுதிகளில் சுகாதாரத்திற்கான நிலைக்குழு என்று எதுவும் இல்லை என்று கூறினர். தேசிய அளவில் 45 சதவீதத்தினர் நிலைக்குழு இல்லை என்று தெரிவித்தனர் (மொஹந்தி 2013).

குறிப்பிடத்தக்க ஒரு நல்ல அம்சம், பல இடங்களில் ஊராட்சிகளின் பெண் உறுப்பினர்கள் நோய்த் தடுப்பு மற்றும் இளம் பிள்ளைவாத ஒழிப்பு ஆகியவற்றுக்காக முனைப்புடன் பிரச்சாரம் செய்துள்ளனர். கல்விக்கும் ஊராட்சிகளுக்குமான இணைப்பு பலவீனமாகவே உள்ளது. 1997ல் ஊராட்சிகளுடன் தொடர்புள்ள தொடக்கக் கல்வி நிலை குறித்து நாங்கள் ஆய்வு செய்தோம். இதில் ஊராட்சிகளுக்கு கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பொறுப்பு மட்டுமே தரப்பட்டிருப்பது தெரியவந்தது (மொஹந்தி, ராய், குப்தா – 1997).

சென்ற ஆண்டு ஆசிரியர் நியமனங்களுக்கான அதிகாரத்தை ஊராட்சித் தலைவர்களுக்குப் பரவலாக்க மத்தியப்பிரதேச மாநில அரசு முயன்றபோது, அந்த மாநில ஆசிரியர்கள் ஊராட்சிகளுக்கு எதிராகத் திரும்பினார்கள் என்பது கவனிக்கத்தக்கது (சூரஜ்குமார் – 2012). அதேபோல், குழந்தைகளையும் பெரியவர்களையும் பாதிக்கக்கூடிய வேறுபல திட்டங்களிலும் நேரடியாக திட்டமிடுதல், பணம் செலவிடுதல் ஆகியவற்றிலிருந்து ஊராட்சிகள் ஒதுக்கியே வைக்கப்பட்டுள்ளன. சுகாதாரத்தைப் போலவே மதிய உணவு, அங்கன்வாடி போன்ற செயல்பாடுகளையும் பெண் பிரதிநிதிகள் தங்கள் சொந்த ஈடுபாட்டிலேயே கண்காணிக்கிறார்கள். (தேசிய தொலைக்காட்சியில் இடம்பெறும் ஒரு விளம்பரத்தில் மதிய உணவு திட்டங்களை ஊராட்சிகளின் பெண் தலைவர்கள் கண்காணிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது என்பது கவனிக்கத்தக்கது).

## ஊராட்சிகள், குழந்தை உரிமைகள் குறித்து மற்ற அமைச்சகங்களும் துறைகளும் கருதுவது என்ன ?

சேவைகள் சார்ந்த பல்வேறு அமைச்சகங்களும் துறைகளும் மாறுபட்டத் தளங்களில்தான் செயல்படுகின்றன. அவற்றிற்கிடையே எவ்விதமான தகவல் தொடர்பும் கிடையாது என்பது நன்கு தெரிந்த விஷயமே. அடித்தளத்தில் ஒரு தொடர்புப் புள்ளியாக ஊராட்சிகள் செயல்பட முடியும் என்று முன்பு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைமுறையில், கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்றவற்றிற்கான பல்வேறு நிலைக்குழுக்களில் ஊராட்சிமன்றத்திலிருந்து ஒரே ஒரு உறுப்பினர் மட்டுமே இடம்பெற்றிருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இதில் ஊராட்சிகளுக்கு மிகக் குறைந்த பங்களிப்பே உள்ளது. குறிப்பிட்ட ஊராட்சி உறுப்பினர் முனைப்புடன் செயல்படவில்லை என்றால்,

அந்த நிலைக்குழு பற்றிய தகவல் ஊராட்சிமன்றத்தை ஒருபோதும் சென்றடைவதில்லை.

**மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம்**

ஊராட்சி உறுப்பினர்களுக்காக மட்டும் என குழந்தைப் பாதுகாப்பு தொடர்பான கையேடு ஒன்றை இந்த அமைச்சகம் தயாரித்துள்ளது. குழந்தை உரிமைகள் தொடர்பான பல்வேறு அம்சங்களையும் அந்த உரிமைகளைப் பாதுகாப்பதில் ஊராட்சி உறுப்பினர்கள் எந்த அளவிற்கு சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்பதையும் 88 பக்கங்கள் கொண்ட அந்த புத்தகம் விளக்குகிறது *(http://wcd.nic.in/panchayatmembershandbook.pdf.)* ஊராட்சி உறுப்பினர்கள் தங்களது பொறுப்புகளைப் புரிந்துகொள்ளவும், குழந்தை உரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் உதவும் நோக்கத்துடன் இந்தக் கையேட்டை யுனிசெப் அமைப்பும் அமைச்சகமும் இணைந்து தயாரித்துள்ளன. ‘‘திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காகவும், குழந்தை பாதுகாப்புக்கான நிதியாதாரங்களை அதிகரிக்கச் செய்யவும்’’ இது உதவும் என, இந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதியுள்ள அமைச்சர் ரேணுகா சவுத்ரி கூறியுள்ளார். குழந்தைகள் கடத்தப்படுவது, இதர பல துன்புறுத்தல்கள் போன்றவை தொடர்பான பிரச்சனைகளில் அடிப்படையான சேவைகள் முதல் பல்வேறு பாதுகாப்புகள் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. குழந்தைகளின் பிரச்சனைகளை ஊராட்சி உறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள், நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதேபோல், கிராம ஊராட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் குழந்தைகள் என்பவர்கள் ‘‘வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல. மாறாக (அவர்களது அருகிலேயே உள்ள) உண்மையான பெயர்களும் முகங்களும் ஆகும்,’’ என்று தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆர்) சுட்டிக்காட்டுகிறது. குழந்தைகளின் நலன்களுக்காக சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகள் மற்றும் வட்டார அதிகாரிகளோடு தொடர்பு கொள்வதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது என்று ஆணையம் கூறுகிறது *(http://www.ncpcer.gov.in/childrights_panchayat.htm)* சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கிராம ஊராட்சிகளை ஈடுபடுத்துவதற்கான சில முன்முயற்சிகளை மாநில அரசுகள் மேற்கொண்டன. அந்த உதாரணங்களையும் என்சிபிசிஆர் சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், அந்த செயல்பாடுகள் தொடர்பான விவரங்கள் எதையும் என்சிபிசிஆர் தெரிவிக்கவில்லை. எனினும், பொதுவாக, ஊராட்சிகளுக்குப் போதுமான அதிகாரம் இல்லை என்பதாலும், குழந்தைகள் உரிமை பற்றி தெரிவதில்லை என்பதாலும் நாடு முழுவதுமே குழந்தைகள் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற அமைச்சகங்களின் பதிவுகளை ஆராய்ந்தால் இது தெளிவாகப் புலப்படும். அதனைப் பின்னர் பார்ப்போம்.

**பொருளாதார ஆய்வு (2012 – 2013):** இந்த ஆண்டிற்கான பொருளாதார ஆய்வில் ‘‘கவனம் தேவைப்படுகிற மற்றொரு களம் அதிகாரப் பரவல் நடவடிக்கையாகும். திட்டங்கள் பொதுவாக கீழிலிருந்து மேலே செல்லும் அணுகுமுறையுடன் வகுக்கப்படுகின்றன, ஊராட்சிகளையும் ஊராட்சி நிர்வாக அமைப்புகளையும் மையமாகக் கொண்டுள்ளன என்ற போதிலும் கூட நடைமுறையில் இவை மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் வகையிலேயே அமலாக்கப்படுகின்றன. உள்ளூர் மக்களின், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக் கூடிய மக்களின் எதிர்பார்ப்புகளை இத்திட்டங்கள் செயலூக்கத்துடன் நிறைவேற்றுவதில்லை,’’ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஊராட்சிகளுக்கு ‘‘போதுமான திறன்’’ இல்லாததுதான் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது என்றாலும், அதிகாரவர்க்கத்தினரின் அணுகுமுறை குறித்து எதுவும் சொல்லப்படவில்லை.

**12வது ஐந்தாண்டுத் திட்டம்:** உள்ளாட்சி அமைப்பின் பலவீனமான செயல்திறன் குறித்து இதேபோன்ற கருத்தை திட்டக்குழுவும் எதிரொலிக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு உள்ளூர் அதிகாரம் போதுமான அளவிற்கு இல்லை என்று திட்டக்குழு ஒப்புக்கொள்கிறது. ஆகவேதான் ஏழைகளிலும் ஏழைகளாக இருக்கும் மக்களைச் சென்றடையும் நோக்கத்துடன் காலஹந்தி, போலாங்கிர், கொராபுக் பகுதிகளுக்கான பின்னடைந்த பகுதிகள் நிதியுதவித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், மேற்கூரிய காரணங்களால் பலவீனமான மூன்றடுக்கு உள்ளாட்சி கட்டமைப்பினால் பயனுள்ள முறையில் செயல்படமுடியவில்லை என்று திட்டக் குழு கூறுகிறது. (12வது ஐந்தாண்டுத் திட்டம் குறித்த ஒரு அணுகுமுறை: விரைவான, உறுதியான, அதிகமான மக்களை உள்ளடக்கிய வளர்ச்சி, 2012 – 2017).

**முன்னால் உள்ள வழி: உள்ளாட்சிகளின் பங்கு**

ஆக, பொதுவாகக் குழந்தைகளின் நிலை, குறிப்பாக பெண் குழந்தைகளின் நிலை, அப்படி ஒன்றும் மெச்சத்தக்கதாக இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது. இந்திய கலாச்சாரம் குழந்தைகளைப் போற்றுகிறது. மலடாக

இருந்துவிடக் கூடாது என்று பல பெண் தெய்வங்களை மக்கள் வணங்குகிறார்கள். மக்கள் விகிதத்தின் அடிப்படையில் இந்தியா ஒரு இளமையான நாடு என்றும் பெருமையடித்துக்கொள்ளப்படுகிறது. ஆனால், குழந்தை மரண விகிதம், ஊட்டச்சத்தின்மை, கொத்தடிமை ஆக்கப்படும் குழந்தைகள், கடத்தப்படும் குழந்தைகள் போன்ற பிரச்சனைகள் இங்கு மிக அதிகமாக உள்ளன. வாய்ப்புகள் மறுக்கப்படுவது என்பது பெண் குழந்தைகளைப் பொறுத்தவரையில் மிக அதிக அளவில் உள்ளது. ஏழ்மை நிலையில் உள்ள மற்ற தெற்காசிய நாடுகளைவிட இந்தியாவில் இது மிக அதிகம். பாலின விகிதம், குழந்தை மரண விகிதம், பள்ளிகளிலிருந்து நின்றுவிடும் விகிதம், ஊட்டச்சத்தின்மை விகிதம் உள்ளிட்டவற்றில் பெண் குழந்தைகளின் நிலைமை ஆண் குழந்தைகளின் நிலைமையைவிட மோசமாக இருக்கிறது.

ஒரு கெடு வாய்ப்பாக பெண் குழந்தைகளின் நிலைமையானது இந்தியப் பெண்களின் நிலைமையோடு நெருக்கமாக இணைந்திருக்கிறது. இந்தியப் பெண்களின் நிலைமையோ அப்படி ஒன்றும் சொல்லிக்கொள்ளத் தக்கதாக இல்லை! இந்தியாவைப் போன்றதொரு கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்க சமுதாயத்தில் இதைத்தான் எதிர்பார்க்க முடியும். கண்ணுக்குப் புலப்படாதவர்களாக பெண்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலையை மாற்றுவதற்காகத்தான், மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு இடஒதுக்கீடு என்ற சட்டப்பூர்வ ஏற்பாடு செய்யப்பட்டது. இது ஏராளமான பெண் தலைவர்கள் உருவாவதற்கு வழிவகுத்துள்ளது. அதன் விளைவாக ஒரு சமுதாய அசைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஊராட்சிகளின் பெரும்பாலான பெண் தலைவர்கள் முதல் முறையாக பொறுப்புக்கு வந்தவர்களாக குடும்பத்தின் ஆணாதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக, சாதி, வர்க்கம் ஆகியவற்றிற்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

அதாவது, தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாலேயே குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவர்களது அந்தஸ்து உயர்ந்துவிடவில்லை. ஏனென்றால், அவர்களது பணிகள் இப்போதும் குறைத்தே மதிப்பிடப்படுகின்றன. இரட்டைச் சுமைகளை ஏற்க வேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். மேலும், கடந்தகால சமூக நடைமுறைகள் கிராமப்புற பெண்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அதனால்தான், பெண் குழந்தைகளுக்கு எதிரான அவர்களது அணுகுமுறையில் மாற்றம் ஏற்படவில்லை. இத்துடன் இணைந்த பிரச்சனைதான், ஊராட்சி அமைப்புகளுக்கு உண்மையான அதிகாரம் இல்லை என்பதும் போதுமான நிதி ஆதாரங்களோ, ஊழியர்களோ இல்லை என்பதும். உள்ளாட்சி அமைப்புகள் முழுக்க முழுக்க மத்திய – மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடுகளைச் சார்ந்தே இருக்கின்றன. நடைமுறையில் ஊராட்சிகள் வெறும் கண்காணிப்பு அமைப்புகளாகவே மாறியுள்ளன. மிகுந்த பாகுபாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருப்பவர்கள் குழந்தைகள்தான். ஆனால், பஞ்சாயத்து ராஜ்அமைப்பின் சட்ட ஏற்பாடுகளில் கண்ணுக்கே புலப்படாதவர்களாக வைக்கப்பட்டிருப்பவர்களும் குழந்தைகள்தான். ஆகவேதான், குழந்தைகளுக்கு சாதகமான பல திட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் அவர்களது பிரச்சனைகள் தொடர்ந்து நீடிக்கின்றன.

அரசாங்க அமைப்புகளோடும் அரசுசாராத அமைப்புகளோடும் நடத்திய கலந்தாய்வுகளில் வந்த ஒரு முக்கியமான பரிந்துரை, உள்ளாட்சிகளில் செயல்படுவோருக்கு ஒரு பெரும் பங்கு இருக்க வேண்டும், அதற்காக பெண் தலைவர்களுக்கு சாதகமான சூழல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதாகும். பெண் குழந்தைகள் குறிப்பாக எந்தச் சூழலில் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய நிலைமை மேலும் அதிகரிக்கிறது என்று கிடைத்துள்ள விவரங்கள் தெரிவிக்கின்றன. வர்க்கம், சாதி ஆகிய பிரிவுகள் ஒன்றோடு ஒன்று பிணைந்திருப்பது கிராம மக்களிடையே கூடுதலாக வெளிப்படுகிறது. இதனால், பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கும் பங்கு மேலும் அதிகரிக்கிறது.

இந்தப் பங்களிப்பின் சில கூறுகளை தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (என்ஆர்எச்எம்), ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம் (ஐசிடீஎஸ்), இரண்டுமே உள்ளடக்கியதாக இல்லை. ஆஷா, துணை செவிலியர் (ஏஎன்எம்), அங்கன்வாடி பணியாளர்கள் போன்றோரது பங்களிப்பும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால், இதற்கெல்லாம் அப்பால், பெண் குழந்தைகளின் பிரச்சனைகள் (உயிர் வாழ்ந்தல், சுகாதாரம், ஊட்டச்சத்து, திருமணம், கல்வி, பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை) என்று வருகிறபோது உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு கண்காணிப்பதிலும் மதிப்பீடு செய்வதிலும் உள்ளாட்சி பிரதிநிதிகளின் திறன்களை மேம்படுத்துவது முக்கியமாகும்.

(2013 ஏப்ரல் 22, 23 அன்று புதுதில்லியில் நடைபெற்ற 12வது பெண்களுக்கான அரசியல் அதிகாரம் வழங்கல் தின கொண்டாட்டக் கருத்தரங்கில் முன் வைக்கப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதி இது. புதுதில்லியில் உள்ள சமூக விஞ்ஞான நிறுவனம் இந்த நிகழ்ச்சியை நடத்தியது.)

**ஆதாரம்: May 3-9, 2013 MAINSTREAM**

# காஞ்சிபுரம் மாவட்டம், சித்தாமூர் ஒன்றியம், பேரம்பாக்கம் ஊராட்சி தலித் தலைவர் லாவண்யா ஊராட்சிப் பணிகளில் அரசு அலுவலர்களால் சந்தித்த பாகுபாடுகள்

இவ்வூராட்சியில் பேரம்பாக்கம், ஆனந்தபுரம் ஆகிய இரண்டு கிராமங்கள் உள்ளன. மொத்த மக்கள் தொகை 1750. இதில் ஆண்கள் 827, பெண்கள் 923. 175 குடும்பங்கள் வறுமை கோட்டுக்குள் உள்ளன. இங்கு வன்னியர், செட்டியார், முதலியார், நாயக்கர், தலித் மற்றும் பழங்குடியினத்தவர்கள் வசிக்கின்றனர். இதில் 300 தலித் குடும்பங்களும் 12 பழங்குடியினர் குடும்பங்களும் உள்ளன. 2011ம் ஆண்டில் பேரம்பாக்கம் பொதுத் தொகுதியாக அறிவிக்கப்பட்டது. ஊராட்சித் தேர்தலில் லாவண்யாவை எதிர்த்து திருமலை, ராமச்சந்திரன், மாரி, மாவத்தாள், சாமிகண்ணு, தமிழ்செல்வன், பஞ்சாட்சரம், கணபதி, அன்பழகன் ஆகிய 9 நபர்கள் போட்டியிட்டனர். இவ்வூராட்சியின் மொத்த ஓட்டுகள் 714. அதில் பதிவான ஓட்டுகள் 581, செல்லாத ஓட்டுகள் 15. இத்தேர்தலில் தலித் பெண் லாவண்யா 120 ஓட்டுகள் வித்தியாசத்தில் 223 ஓட்டுகள் பெற்று ஊராட்சித் தலைவராகப் பொறுப்பேற்றார். இவரது வயது 28. 10வது வரை படித்துள்ளார். இவரது கணவர் மகேந்திரன் ITI மெக்கானிக் படித்துள்ளார். இவர் மக்கள் நலப் பணியாளராகப் பணியாற்றியவர். இவர்களுக்கு 8 வயதில் ஒரு மகள், 3 வயதில் ஒரு மகன் ஆகியோர் உள்ளனர். சொந்த வீடும் 2 ஏக்கர் நிலமும் உள்ளன. தொழில், விவசாயம்தான்.

இவ்வூராட்சியின் இரண்டு கிராமத்திலும் பசுமை வீட்டுத் திட்டத்தின் கீழ் 21 தொகுப்பு வீடுகள் (தலித்துக்கு 2, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 1) அளிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் (2013–14) தலித்துக்கு 7, பிற வகுப்பினருக்கு 3 என மொத்தம் 10 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வூராட்சியில் கிராம சபையில் வைத்துதான் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படும். கிராம சபைக்கு மக்களின் ஆதரவு மற்றும் பங்கேற்பும் பெருமளவு இருக்கிறது. இதில் கிருஷ்ணமூர்த்தி (வன்னியர்) என்பவர் நேரடியாக வராமல் மறைமுகமாக சில நபர்களை வைத்து இடையூறு செய்கின்றார்.

பேரம்பாக்கத்தில் கடந்த 3 ஊராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற மூன்று தலைவர்களுமே ஆதிக்க சாதியினரான வன்னியர் கிருஷ்ணமூர்த்தியிடம் பினாமித் தலைவர்களாகவே இருந்துள்ளனர். அவர்களைப் போலவே லாவண்யாவும் அவருக்குக் கீழ் அடங்கி ஊராட்சிப் பணிகளைச் செய்வார் என்று கிருஷ்ணமூர்த்தி எதிர்பார்த்துள்ளார். லாவண்யா இவருக்கு கீழ் அடிபணியவில்லை என்பதால் ஊராட்சிப் பணிகளில் பல தடைகளை சந்திக்க வேண்டியுள்ளது. அரசு அதிகாரிகள் இவருக்கு பயந்து செயல்படுவதால் எந்த ஊராட்சிப் பணியையும் சுதந்திரமாக தலைவரால் செய்ய முடியவில்லை. இவ்வூராட்சியில் உள்ள குழந்தைகளுக்கு பள்ளியில்லை. பக்கத்து ஊரான முகந்தூரில் ஆரம்பப்பள்ளியும் உயர்நிலைப்பள்ளியும் உள்ளன. இது பேரம்பாக்கத்திலிருந்து சுமார் 2கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கு படித்தவர்கள் 10% மட்டுமே. மற்றவர்கள் விவசாயம், விவசாயக் கூலி சிறு வியாபாரம் போன்றவற்றை செய்கிறார்கள். MNREGA பணிக்காக 328 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு சாலை மேம்பாடு, குளம் தூர் வாருதல், ஏரி தூர் வாருதல் போன்றவை செய்யப்பட்டுள்ளன. இங்கு ஒரு கல் குவாரி உள்ளது. இதில் எப்போதாவது பணி நடக்கும் போது ஊராட்சிக்கு ஏதாவது நிதி தரப்படும். இதுவரை 2011 ஆண்டு தேர்தலுக்கு பின் எந்த வரியும் செலுத்தவில்லை. குடிநீர் இணைப்பு 90 நபர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

1200 மீட்டர் மற்றும் 700 மீட்டர் தூரம் குழாய் அமைக்கப்பட்டு ஒவ்வொரு தெருவிற்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு14 சுய உதவிக்குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிலும் 15 நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு சில பயிற்சிகள் கொடுக்கப்படுகிறது. மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அதிக பயன் அடைந்துள்ளார்கள். இரண்டு விளையாட்டு மைதானங்களும், இரண்டு சுடுகாடுகளும் உள்ளன. விளையாட்டு மைதான பராமரிப்பு செலவு வருடத்திற்கு ரூ.10,000 திமுக ஆட்சியில் கொடுக்கப்பட்டது. அந்த நிதி நிறுத்தப்பட்டுள்ளதால் விளையாட்டு மைதானத்தை ஊராட்சித் தலைவரே பராமரிக்க வேண்டிய நிலைமை உள்ளது.

ஏற்கனவே ஒவ்வொன்றுக்கும் ஊராட்சி நிதி பற்றாக்குறையாக உள்ளதால், முழுமையான பணி செய்வது என்பது முடியாத செயலாக இருக்கிறது. பாரத சுகாதாரத் திட்டத்தின் கீழ் கழிவறை கட்ட ஒரு குடும்பத்துக்கு ரூ.11,100 கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகையும் கழிப்பிடம் கட்ட பற்றாக்குறையாகவே உள்ளது. இதற்குக் கட்டுமானப் பொருட்கள் வாங்க வேண்டும். அரசு கொடுக்கும் ஆட்கூலி

ரூ.72, ஆனால் நடைமுறையில் வாங்கப்படும் கூலியோ ரூ. 350. சிக்கனமாகச் செலவு செய்தாலும் ரூ.14,000க்கு மேல் செலவு ஆகிறது. இந்த ஊராட்சிக்குக் குடிநீர் மேம்பாட்டுக்காக ரூ.80,000 கொடுக்கப்பட்டு ஆழ்துளை கிணறு போடப்பட்டது. ஆனால் அந்த இடத்தில் தண்ணீர் இல்லை. இதனால் வீண் விரயம் ஆகிவிட்டது. வேறு இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க நிதி இல்லை. ஊராட்சிக்கு நிதி குறைவாக வருவதால் ஊராட்சி பணிகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளது. வீட்டு வரியாக வருடத்திற்கு ரூ. 5,700தான் வருகிறது.

TVS கம்பெனி ஒன்று ஊராட்சி நிலத்தில் 3 1/2 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்துள்ளது. வரியும் கட்டுவது இல்லை. இதை எடுப்பததற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். ஊராட்சிகளில் 3 பம்ப் ஆப்பரேட்டர்களும், ஒரு ஊராட்சி உதவியாளரும் உள்ளனர். இவர்களுக்கு ரூ.2750லிருந்து ரூ. 7160வரைதான் சம்பளம் தரமுடிகிறது. 2001ம் ஆண்டிலிருந்து அதே நிதியைத்தான் இன்னும் அரசு வழங்கி கொண்டு இருக்கிறது. வருடங்கள் மட்டும் ஓடிக்கொண்டு இருக்கிறது. விலைவாசி ஏறுகிறது. ஊராட்சிக்கு நிதியின் நெருக்கடியும் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

ஊராட்சியின் நிலம் 7 ஏக்கர் வனத்துறையிடம் குத்தகைக்கு விடப்பட்டது. இதை மீண்டும் பெறுவதற்கு முன்னாள் ஊராட்சித் தலைவர்களும் இப்பொழுது உள்ள தலைவர் லாவண்யாவும் பல முறை முயன்றுள்ளனர். வனத்துறையினரிடம், ஊராட்சிக்கு சொந்தமான இடத்தை திருப்பிக் கொடுத்தால், குடிமனை இல்லாதவருக்கு இருப்பிட வசதி செய்து கொடுப்போம் என்று கேட்டதற்கு வனத்துறையினர் கிணற்றில் போட்ட கல்லாக இருக்கின்றனர். ஊராட்சியில் உள்ள மக்கள்அந்த நிலத்தில் குடிசை போடுவதும் காவல் துறையினர் அதைப் பிடுங்கி எறிவதுமாக இருக்கின்றனர்.

2010ம் ஆண்டு குடிசை போட்டு போராட்டம் நடத்தியதால் ராணுவமும், காவல் துறையினரும் மக்களை விரட்டினர். இதற்காக சித்தாமூர் காவல்நிலையம், மேல்மருவத்தூர் காவல் நிலையம், மதுராந்தகம் போன்றவற்றில் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் DSP அலுவலகத்திலும் போராட்டம் நடைபெற்றது. எவ்வளவு போராட்டங்கள், துண்டுப் பிரசுரம் செய்தாலும் வனத்துறையினர் அந்த நிலத்தை விடுவதாக இல்லை. இங்கு 20 ஆண்டுகள் ஆன தண்ணீர்த் தொட்டி ஒன்று உள்ளது. தண்ணீர் தொட்டியை சீர் செய்ய 15 முறை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டு இன்று வரை அதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை என்பது ஊராட்சியின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

## திருமிகு. லாவண்யா மகேந்திரன், பேரம்பாக்கம் ஊராட்சி

எனக்கு வயது 28. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் இருக்கின்றனர். எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். மேலும் எனக்கு நிர்வாகத்தில் எனது கணவர் உதவி செய்கிறார். நான் தலித் இனத்தைச் சேர்ந்தவள். பேரம்பாக்கம் ஊராட்சி 6 வார்டுகளைக் கொண்டது. இந்த வார்டுகள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கானது. இதில் குமார், முருகன், மாலதி, முருகன் ஆகியோர் வார்டு உறுப்பினர்களாக உள்ளனர். 2 வார்டுகள் ஆதிதிராவிடர் பெண்களுக்கானது. இதில் ராஜேஸ்வரி, பூஞ்சோலை ஆகியோர் வார்டு உறுப்பினர்களாக உள்ளனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குமார் அவர்கள் துணைத் தலைவராக இருக்கிறார். இவர் நிர்வாகத்தில் உதவி செய்கிறார்.

இங்கு முக்கிய தொழில் விவசாயமும் அது சார்ந்த தொழிலும் மட்டுமே. எங்கள் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டத்தில் மக்கள் அதிகம் கலந்து கொள்வார்கள். அவர்கள் நிறைகுறைகளை அங்குதான் கூறுவார்கள். அப்படி இருக்க 32 பேர் அரசு உதவித் தொகை பெறுவதற்காக என்னிடம் மனு கொடுத்தனர். அதன் பேரில் நான் கிராம நிர்வாக அலுவலரிடம் கையொப்பம் பெறுவதற்காக சென்றேன். அவர் போட மறுத்துவிட்டார்.

பின்னர் BDOவிடம் முறையிட்டேன். அவர் உங்கள் ஊராட்சியில் உள்ள ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் திருமதி. கவிதா மற்றும் அவர் அப்பா (அதிமுக கட்சியைச் சார்ந்தவர்) உங்கள் பணிகளில் குறுக்கிட்டு நிறுத்திவிட்டனர் என்று கூறினார். மேலும் எனது ஊராட்சியில் அனைத்து வேலைகளிலும் அவர்கள் அரசியல் குறுக்கீடு அதிகமாக உள்ளது. எனது ஊராட்சியில் கனிம வளநிதி ரூ. 12 லட்சம் இருந்தது. அந்த நிதியில் இருந்து சிமெண்ட் சாலை போடுவதற்கு BDO அவர்களிடம் சென்று தீர்மானம் எழுதிக்கொடுத்தேன். அவர் முதலில் பணி செய்ய உத்தரவிட்டார். பின்னர் நான் தலித் பெண் தலைவர் என்பதால் என்னை மிகவும் இழிவுபடுத்தினார். மேலும் எனது கணவரோடு மனிதவள மேம்பாட்டு நிறுவனம் என்ற நிறுவனத்தை அணுகி எனது குறைகளைக் கூறினேன்.

பின்னர் அவர்கள் என்னுடன் இணைந்து மாவட்ட ஆட்சியர் அவர்களை சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்தனர். அங்கு நேரில் எனது குறைகளை எடுத்துக்கூறினேன். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எனக்கு ரூ. 12 லட்சம் பணி செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், 32 நபர்களுக்கு உடனே அரசு உதவித் தொகை அளிக்க ஒத்துழைக்க வேண்டும் என தாசில்தாரிடம் கண்டிப்புடன் கூறப்பட்டது.

பின்னர் மறுநாள் காலை எனது வீட்டிற்கு தாசில்தார் மற்றும் VAO அனைவரும் வந்து மனுவை எடுத்துச் சென்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த சேர்மனும் அவரது அப்பாவும் அரசு, ஊராட்சிக்குக் கொடுத்த இலவசப் பொருட்கள் அனைத்தையும் தாசில்தாரை தொலைபேசியில் மிரட்டி ஊராட்சிக் கட்டிடத்தில் இருந்து எடுத்துச் சென்றுவிட்டனர். நான் கேட்டதற்கு சேர்மன் எடுத்துச் செல்ல சொல்கிறார் என்று மட்டும் என்னிடம் கூறினார்கள். நான், அவர்கள் பொருட்களை ஏற்றும் போதும் இறக்கும்போதும் புகைப்படம் எடுத்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தேன். மாவட்ட ஆட்சியர் அனைவர் மீதும் நடவடிக்கை எடுத்து இலவசப் பொருட்கள் அனைத்தையும் திரும்ப மக்களுக்கு கிடைக்கச் செய்தார்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்ட திட்ட இயக்குநர் அவர்கள் எங்கள் ஊராட்சியில் MNREGA பணி சிறப்பாக உள்ளது என்பது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு தகவல் அனுப்புவதாகக் கூறி எனக்கு உதவி செய்தார். பின்னர், மாவட்ட ஆட்சியர் விருப்ப நிதியில் இருந்து எனக்கு 10 பசுமை வீடுகள் கட்ட நிதி அளிக்கப்பட்டது. இதில் MLA, BDO, சேர்மன் அனைவரும் அரசியல் குறுக்கீடு செய்து எங்கள் ஊராட்சிப் பணிகளை முடக்குவதால் தலித் பெண் தலைவராகிய நான் சுயமாகவும் சுதந்திரமாகவும் நிர்வாகம் செய்ய முடியவில்லை.

**– ஆய்வு மற்றும் அறிக்கை தொகுப்பு: மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) & மனிதவள மேம்பாட்டு நிறுவனம் (HRDF)**

## 150 நாள் வேலை திட்டத்தில் 5.20 லட்சம் பேர் பயன்

**எஸ்.டி. – எஸ்.சி., நிலங்களிலும் பணி**

வறட்சி நிலவுவதால், ஆண்டுக்கு, 100 நாள் வேலை என்பதை, மத்திய அரசு, 150 நாட்களாக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, தமிழகத்தில், 5.20 லட்சம் பேருக்கு, கூடுதலாக, 50 நாட்கள் வேலை கிடைக்கிறது. கிராமப்புற கூலி தொழிலாளர்களுக்கு, ஆண்டுக்கு, 100 நாட்கள் வேலை அளிக்கும் உறுதித் திட்டத்தின் மூலம், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட, பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்–படுகின்றன. தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை பொய்த்தது, காவிரியில் உரிய நீர் கிடைக்காதது. டெல்டா மாவட்டங்கள் உட்பட, தமிழக்ததின் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

**விவசாயம் பாதிப்பு:** வேளாண் உற்பத்தி, கடுமையாக பாதிக்கப்பட்டதால், விவசாய கூலிகள் வேலையிழந்துள்ளனர். இதை, சரிக்கட்டுவதற்காக, ஆண்டுக்கு, நூறு நாள் அளிக்கப்படும் வேலையை, 150 நாட்களாக, மத்திய ஊரக வளர்ச்சித்துறை அதிகரித்துள்ளது. தமிழகத்தில், 5.20 லட்சம் பேர், 100 நாள் வேலையை பெற்ற பின், கூடுதலாக வழங்கப்படும், 50 நாள் வேலைக்கு பதிவு செய்து, பணியையும் பெற்று வருகின்றனர். கூடுதலாக, 50 நாள் வேலை அளிக்கும் திட்டம், பிப்.21ம் தேதி முதல், துவங்கப்பட்டு உள்ளது. கூடுதல் வேலை என்பது, நடப்பு நிதியாண்டு முடியும் மார்ச், 31ம் தேதி வரை, அளிக்கப்படுகிறது. தமிழகத்தில், விவசாயம் கடுமையாக பாதித்துள்ள, டெல்டா மாவட்ட சிறு, குறு விவசாயிகள் மற்றும் கூலி தொழிலாளிகள், இதன் மூலம, அதிக பயன் பெறுகின்றனர்.

**எஸ்.சி – எஸ்.டி. நிலங்கள்:** வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ள தஞ்சை, நாகை, திருச்சி, திருவாரூர், அரியலூர், கரூர், புதுக்கோட்டை, கடலூர் ஆகிய 8 டெல்டா மாவட்டங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட பழங்குடியின விவசாயிகளின் நிலம். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள சிறு, குறு விவசாயிகளின் நிலங்களில் குட்டைகள் அமைக்கும், பணியை, நூறு நாள் வேலை திட்டத்தில் மேற்கொள்ள, புதிய சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு உள்ளது. வறட்சியால் வேலையிழந்த, விவசாயக் கூலிகள் பலனடைய வேண்டும் என்பதற்காக, குட்டைகள் அமைக்கும் பணியை, அவர்களுக்கு மட்டுமே அளிக்க வேண்டும் என, சட்டத் திருத்தத்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. மேலும், குட்டைகள் மூலம், நீரை சேமிப்பதால், நிலத்தடி நீர் மேம்படும், வறட்சி காலங்களில், நீரைப் பெற, இக்குட்டைகள் உதவியாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கூடதலாக, 50 நாட்கள் வேலை அளிக்கப்படும் என்ற மத்திய அரசின் உத்தரவு பிப். 21ம் தேதி முதல், அமலுக்கு வந்துள்ளது. மார்ச், 31ம் தேதி வரை, தான் வேலை அளிக்கப்படும். 50 நாள் என்ற உத்தரவில், 39 நாட்கள்தான் வேலை அளிக்கப்படுகிறது. எனவே, வேலை கிடைக்காத, 11 நாட்களுக்குரிய கூலியை, நிவாரணமாக அளிக்க வேண்டும் என, தமிழக உழவர் சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

**இழப்பீடு வேண்டும்:** ஆனால், இதை மறுக்கும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள், ஒரு குடும்பத்துக்கு, ஆண்டுக்கு, 100 நாள் வேலை என்று தான், மத்திய அரசு அறிவித்துள்ளது. எனவே, கூடுதலாக அளிக்கப்படும், 50 நாள் வேலையும், ஒரு குடும்பத்துக்குத்தான். எனவே, கூடுதலாக அறிவிக்கப்பட்ட, 50 நாள் வேலை, தகுதியுள்ள குடும்பங்களுக்கு கிடைக்கும். எனவே, நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியமில்லை'' என்கின்றனர்.

**ஆதாரம்: தினமலர் 13.3.13**

# மதுரா முதல் பன்வாரி வரை

– லட்சுமி மூர்த்தி

மதுரா ஒரு பதினாறு வயது ஆதிவாசிப் பெண். மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள சந்திராப்பூரில் காவல்துறையின் கட்டுப்பாட்டில் அவள் இருந்தபோது கூட்டாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். இந்தக் கொடுமை வெளியே தெரிந்த போது பாலியல் பலாத்காரத்துக்கு எதிராகவும் தற்போதைய குற்றவியல் சட்டங்களை சீரமைக்க வேண்டும் எனவும் நாடு தழுவிய அளவில் ஒரு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அந்த நிகழ்ச்சி நடந்து இந்த வருடத்தோடு ஐம்பத்தாறு வருடங்களாகி விட்டது. பன்வாரி தேவி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பத்தேரி எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் மேல்சாதி ஆண்கள் குழுவால் கூட்டாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இந்தக் கொடூர சம்பவம் நாடு முழுவதும் பலத்த அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. பெண்கள் வேலை செய்கிற இடங்களில் அவர்கள் சந்திக்கிற பாலியல் சித்ரவதைகளுக்கு எதிராக சிறப்பான விதிகள் உருவாவதற்கான கருப்பொருளையும் இந்த சம்பவம் வழங்கியது. இந்தக் கொடுமை நடந்தும் 56 வருடங்களாகி விட்டது.

மேலே சொன்ன இருவரும் பெண்கள் இயக்கங்களின் போராட்டச் சின்னங்களாக ஆகிவிட்டனர். ஆனால், பாலியல் பலாத்காரத்துக்கான சட்டத்தை சீரமைப்பதற்கான பிரச்சாரத்தின் மூலம் அவர்கள் நேரடியாக பயன் அடையாமல் இருக்கலாம். இத்தகைய விவாதங்கள் நடக்கின்றன என்பதை எல்லாம் அறியாத நிலைக்கு மதுரா போய்விட்டார். அவர் திருமணம் செய்து கொண்டு விட்டார். அவரது வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கிறது. இந்திய ஜனநாயகத்தின் ஒரு தூணான உச்ச நீதிமன்றத்தை சவாலுக்கு இழுக்கும் விதமான வழக்கு தனது பெயரில் நடக்கிறது என்பதைக் கூட அவர் அறிய மாட்டார்.

1980களில் மதுரா இருபது வயதைக் கடந்தவராக இருந்தார். அவளது வழக்கு பாலியல் பலாத்காரம் பற்றிய சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வலிமையான உந்து விசையாக இருந்தது. அதனால் தேசிய அளவிலான எல்லா ஊடகங்களின் பத்திரிக்கையாளர்களும் அவளுடைய நேர்காணலை எடுக்க அவளது கிராமத்தில் குவிந்தனர். அதற்குப் பிறகு அவளைப் பற்றி எதுவும் தெரிய வில்லை. இருந்தாலும் , பெண்ணியத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக, நீதித்துறையின் ஆணாதிக்க கருத்துக்களை சவாலுக்கு இழுத்ததற்காக மதுரா வழக்கு பெண்ணிய வரலாற்று ஆவணங்களாய் மாறிவிட்டது. அவள் 1972ல் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு இருந்தாலும் 1979–ல் தான் மக்களின் விவாதத்திற்கு அவளது வழக்கு வந்தது. குற்றம் சாட்டப்பட்ட காவல்துறையினர் மீது பம்பாய் உயர்நீதிமன்றம் விதித்த தண்டனை “புகார் என்பது பாலியல் காரணங்களோடு தொடர்புடையது” என்று சொல்லி ரத்து செய்யப்பட்டபோது எப்போதும் இல்லாத வகையில் முதல் முறையாக அந்தத் தீர்ப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டது. மதுரா உதவி கோரி அலறவில்லை என்பதாலும், தான் பலாத்காரம் செய்யப்படுவதை எதிர்த்துப் போராடிய அடையாளங்கள் அவளது உடலில் இல்லை என்பதாலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனையொட்டி ஒரு விவாதம் கிளம்பியது. அதை ஒப்புதலாக எடுத்துக் கொள்ளலாமா ? அல்லது அதிகாரத்துக்கு அடங்கிப் போகிற தன்மையாக எடுத்துக்கொள்வதா ? அடங்கிப் போவதில் ஒப்புதல் வழங்கி இணங்குவதும் இருக்கிறது இல்லையா ? இரண்டுக்கும் இடையேயான மாற்றம் உண்மையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் விவாதம் கிளம்பியது.

இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளில் உள்ள குறைபாடுகளையும், நீதிமன்ற விசாரணை முறைகளில் உள்ள குறைபாடுகளையும் பற்றி குறிப்பிட்டு, மதுரா வழக்கில் நீதிபதிகளின் நடத்தையை நான்கு சட்டப் பேராசிரியர்கள் கண்டித்தனர். இந்திய சட்டத்திலும் அரசியல் சாசனத்திலும் உள்ள மனித உரிமைகளை கைவிட்டு விட்டு எடுக்கப்பட்ட அசாதாரணமான முடிவு என விமர்சித்தனர், சமூகப் பின்னணியைப் பார்க்க வலியுறுத்தினர். பாதிக்கப்பட்ட அந்த இளம்பெண் மிகக் கீழான சமூகப் பொருளாதார நிலையில், சட்ட உரிமைகள் பற்றிய எந்த ஒரு அறிவும் இல்லாதவராக, பயன்படுத்துவதற்காக சட்ட உரிமைகளை அணுக முடியாதவராக, பயத்தோடு இருந்துள்ளார். “இந்திய காவல் நிலையங்களில் ஏழைகளையும் நலிந்தோரையும் சுரண்டுவதற்காக அவர்களின் இத்தகைய நிலையைதான் பயன்படுத்திக்கொள்கின்றனர் " என்று அவர்கள் கூறினர். “ படிக்க இயலாத, கூலி வேலை செய்கிற , அரசியல் உணர்வு இல்லாத மதுராவைப் போன்ற பெண்கள் இந்திய அரசியல் சாசனம் வருவதற்கு முன்பு இருந்த நிலையின் விளைவாக இவ்வாறு இருப்பதற்காக அவர்களை கட்டாயம் கண்டித்தாக வேண்டுமா என்ன ? " என்று அவர்கள் அடிப்படையான கேள்விகளை எழுப்பினர். மனித உரிமைகளையோ அல்லது அரசியல் சாசன உரிமைகளையோ காப்பதற்கான எந்த மாதிரியான பாதுகாப்பும் இதில் இல்லை எனவும் அவர்கள்

விமர்சித்தனர். பாலியல் பலாத்காரம் எனும் குற்றத்தை அதிகார உறவுகள் மற்றும் பாலின சமத்துவம் இல்லாமை ஆகியவற்றின் பின்னணியில் வைத்துப் பார்த்ததன் விளைவாக ,1983ல் இருந்த பாலியல் பலாத்காரம் பற்றிய சட்டம் பெருத்த மாற்றத்துக்குள்ளானது.

காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது பாலியல் பலாத்காரம் எனும் ஒரு பிரிவு சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்தான் தன்னை குற்றம் இல்லாதவர் என நிரூபிக்க வேண்டும் என்று மாற்றம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்களை ரகசியமாய் விசாரணை செய்ய வேண்டும், பாதிக்கப்பட்ட பெண்களின் அடையாளங்களை பகிரங்கப்படுத்தக்கூடாது என்னும் விதி முறைகள் வந்தன. தண்டனைகள் மேலும் கடுமையாகின.

**உண்மையான மாற்றம் இல்லை**

இத்தகைய திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்பட்டு ஏறத்தாழ பத்தாண்டுகள் ஓடி விட்டன. ஆனால் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. பெண்கள் முன்னேற்றத்துக்கான ஒரு திட்டத்தில் ராஜஸ்தானில் 1992ல் ஒரு கிராமப்புற ஊழியரான பன்வாரி பணியாற்றினார். கிராமத்தில் நடந்த குழந்தைத் திருமணங்களை நிறுத்தும் அளவு அதிக துணிச்சல் அவருக்கு இருந்ததால் அவரை ஐந்து உயர்சாதி ஆண்கள் கூட்டாக பாலியல் பலாத்காரம் செய்தனர்.

பெண் உரிமை செயல்பாட்டாளர் என்ற முறையில் அவருக்கு, ஒரு பாலியல் பலாத்காரத்தைப் பற்றி புகார் செய்வதற்கான வழிமுறைகள் தெரியும். அவரது கிராமத்தில் இருந்து 55 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த ஜெய்ப்பூரில் பாகுபாட்டு உணர்வோடு இருந்த மருத்துவப் பணியாளர்களோடும் ஓரவஞ்சனையாக இருந்த போலிஸ்காரர்களோடும் ஒவ்வொரு கட்டத்திலும் போராட வேண்டி இருந்தது. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு 52 மணி நேரம் கழித்துதான் அவருக்கு கட்டாயமாக செய்ய வேண்டிய மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. வழக்கம் போலவே சட்டம் மந்தமாக செயல்பட்டது. ஒரு வருடம் கழித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. உயர்சாதி மனிதர்கள் ஒரு தலித் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்திருக்க மாட்டார்கள் என்று கூறி 1995 ல் ஒரு செசன்ஸ் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்தது. சித்தப்பா ,மாமா , அண்ணன் மகன் போன்ற உறவினர்கள் சேர்ந்து ஒரே பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தார்கள் என்பதை நம்ப முடியவில்லை என நீதிமன்றம் கூறியது. குடும்பம் மற்றும் சாதி அமைப்புமுறை தவறு செய்தாலும் அதற்கு தண்டனை கிடையாது என்ற மாதிரியான கருத்துகள் மாறாமல் இருந்தன. உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு நிலுவையில் இருக்கும்போதே குற்றம் சாட்டப்பட்டவர்களில் இரண்டு பேர் 2007ம் வருடத்துக்குள் இறந்து போனார்கள். மதுராவின் வாழ்க்கை போலவே பன்வாரியின் வாழ்வும் ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால் அவர் இந்தியாவின் போராடும் பெண்களுக்கான ஒரு அடையாளச் சின்னமாக மாறிவிட்டார். விருதுகளும் அங்கீகாரமும் அவருக்குக் கிடைத்தன. அவரது போராட்ட உணர்வு வெற்றி பெற்றது.

அவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்காக தொடுக்கப்பட்ட வழக்கு தோற்றுவிட்டது. ஆனாலும், நீதி என்று அழைக்கப்படுவதை பிரதிநிதித்துவபடுத்துகிற பிரம்மாண்டமான சட்ட நிர்வாக இயந்திரத்தோடு மோதுவதில் ஏற்படுகிற எல்லாவித துன்பங்களின் வழியாக பன்வாரியின் போராட்ட உணர்வுதான் வெற்றி பெற்றது.

மங்களூரிலும் பெங்களூரிலும் இந்த வருடம் நடந்த பெண்கள் தினத்தில் பன்வாரியின் உறுதி நினைவு கூறப்பட்டது. பெண்கள் வெறுமனே பாதிக்கப்படுபவர்களாக மட்டும் இருக்கத் தேவையில்லை என அதில் பங்கேற்ற பெண்கள் உணர்ந்தனர். பன்வாரி “நீதி மட்டுமே எனது வயிற்றை நிரப்ப முடியும்,வெற்று வாக்குறுதிகள் அல்ல” என்கிறார். பெண்களின் இயக்கத்தின் முன்னே நிற்கிற மிகக் கடினமான போராட்டங்களில் ஒன்றாக நீதி பற்றிய சமூகத்தின் கருத்துகளோடு இணக்கத்தை கடைபிடிப்பதும் பாதிப்புகளால் அதிர்ச்சி அடைந்துவிட்ட தனி நபர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கச் செய்வதும் இருக்கிறது.

பன்வாரியின் வழக்கு பின்னடைவை சந்திக்கிற நிலையில் , அவரது அனுபவம் பாலியல் சித்ரவதை சம்மந்தமான சட்டத்தின் தன்மையில் அடிப்படையான மாறுதல்கள் வரும் அளவு, அந்த மாற்றத்துக்கான கருப்பொருளைத் தருவதாக அமைந்தது. குறிப்பாக, கிராமப்புறங்களின் அபாயகரமான சூழ்நிலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களின் நிலையை நீதித்துறை உணர்ந்ததால் எழுந்த, கவுரவம், கண்ணியம், வளமை சம்மந்தமான கருத்துக்களை விட, சட்டத்தின் புதிய அணுகுமுறை, அரசியல் சாசன உரிமைகளின் மீது அழுத்தமாக ஊன்றி நின்றது. நாட்டின் உயர்ந்த நீதிமன்றத்தில் பெண்ணுரிமை இயக்கங்கள் எல்லாம் ரிட் மனு போட்டதன் விளைவாக பணியிடத்தில் பாலியல் சித்ரவதை தொடர்பான விதிமுறைகள் 1997ல் அறிவிக்கப்பட்டன. *அதில் நீதிமன்றம் அறிவித்தது வருமாறு:*

பணியிடத்தில் பாலியல் சித்ரவதை என்பது அரசியல் சாசனத்தில் பிரிவு 14ல் வழங்கப்பட்டுள்ள சமத்துவ உரிமைக்கு எதிரானது. பிரிவு 10 வழங்குகிற எந்தத் தொழிலும் எந்த இடத்திலும் செய்யலாம் என்ற உரிமைக்கும்

எதிரானது. வேலை செய்வதற்கான உரிமை என்பது பாதுகாப்பான வேலைச்சூழல் கிடைப்பதைப் பொறுத்தது. பிரிவு 21 வழங்குகிற வாழும் உரிமை என்பது கண்ணியத்துடனான வாழ்க்கைக்கானது ஆகும். இந்தப் பிரிவுகளுக்கு அர்த்தம் இருக்குமானால் பாலியல் சித்ரவதையால் இத்தகைய உரிமைக்கு இடையூறாக எழுந்துள்ள தீங்குகள் நீக்கப்பட வேண்டும்.

உண்மையில், பெண் தொழிலாளர்களின் உரிமையான பாதுகாப்பான வேலைச்சூழலை உறுதிப்படுத்துவதற்கான மிகவும் முற்போக்கான கருத்துக்கள், ராஜஸ்தான் அரசின் பெண்கள் முன்னேற்றத் திட்டத்தின் ஒரு பாதுகாப்பற்ற வேலைக்கான சூழலில் வேலை செய்த பெண் ஊழியரின் அனுபவத்தில் இருந்து எழுந்தது என்பது முரண்பாடு. அனைவருக்கும் வேலை அளிப்பதை அரசாங்கங்கள் மறுத்து வந்துள்ளது நாம் அறிந்ததே.

பெண்களின் பிரச்சனைகள் பற்றிய ஆய்வுகளை நடத்தியுள்ள அறிஞர்கள் பூல்ரேனு குகா, லோடிகா சர்க்கார், வீனா மசூம்தார் ஆகியோர் தயாரித்து 1975ல் வெளியான "சமத்துவத்தை நோக்கி–இந்தியாவில் பெண்களின் நிலை பற்றி" எனும் அறிக்கையின் விளைவாக ராஜஸ்தானில் பெண்கள் முன்னேற்றத்துக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டம் 1970களில் நடந்த அணிதிரட்டல்களுக்கான விளைவாகும். இவை எல்லாமே தனக்குத் தானே முரண்பாடாக இருப்பவை ஆகும். இந்தப் புரிதல்கள் வந்ததால் ஆறாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980–85) முதன்முறையாக பெண்கள் மற்றும் முன்னேற்றமும் என்ற தனி அத்தியாயம் உருவாக்கப்பட்டது. அதில், பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றம் சம்மந்தமாக ,அவர்கள் மத்தியில் குறைவான எழுத்தறிவு விகிதமும், தாழ்ந்த பொருளாதார நிலையும் தான் மிகவும் அக்கறையோடு கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் ஆகும். பெண்களின் சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு என்பது இந்த நாட்டில் இவற்றை எதிர்த்துப் பரவிக் கிடக்கும் சமூகமுறை, நடத்தைகள், நெறிமுறைகள் ஆகியவற்றில் சமூக மாறுதல் வருவதைப் பொறுத்தது.

சுதந்திரத்துக்குப் பிந்திய வளர்ச்சியின் பயன்கள் கிராமப்புறத்தின் மிகப் பெரும்பான்மையான பெண்களுக்கு போய் சேரவில்லை என்பதை சரி செய்யும் சூழலாக அது இருந்தது. மகிளா விகாஷ் அபிகரன் அல்லது பெண்களுக்கான முன்னேற்றத் திட்டம் என்பது ராஜஸ்தானில் 1984ல் உருவானது. அதன் கொள்கை அறிவிப்பு ஆவணத்தில் கீழ்வருமாறு உள்ளது. பெரும்பாலான அரசுத் திட்டங்களில் மக்களின் குடும்பங்கள் ஈடுபட வேண்டியது அவசியம் ஆகும். அவை எல்லாம் பெண்கள் தனிமைப்பட்டு இருப்பதால் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குழந்தை நலத்தில் பெண்களின் ஈடுபாடு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது போலவே பால்வள மேம்பாடு ,சமூகக் காடுகள் வளர்ப்பு, ஐஆர்டிபி, விவசாய உற்பத்தி உள்ளிட்டவற்றிலும் பெண்கள் ஈடுபட வேண்டும். ராஜஸ்தான் மாநிலத்துக்கு மிகவும் சிரமம் தரும் நெருக்கடிகளில் ஒன்றாக பெண்கள் மேம்பாடு இருக்கிறது.

**மாற்றத்துக்கான திட்டம்**

பெண்கள் முன்னேற்றத் திட்டம் கிராமப்புற ராஜஸ்தானில் சிறப்பான பங்கை ஆற்றியுள்ளது. இந்தத் திட்டம் முதலில் பெண்களின் அமைப்புகளோடு நெருங்கியது. அதனால் ஆரம்ப நாட்களில் இந்தத் திட்டம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது சம்மந்தமான புரிதலில் பெரும் முன்னேற்றங்களை கொண்டு வந்தது. பெண்கள் தங்கள் சொந்த வாழ்க்கையை வாழவும் அது உதவியது. கிராமப் பெண்களின் கூட்டங்கள் பெண்கள் தங்களுக்கான கோரிக்கைகளுக்காகத் திட்டமிடும் கூட்டங்களாகின. தங்களை பிணைத்து வைத்துள்ள சங்கிலிகளில் இருந்து பெண்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள அதனைத் தகர்க்கத் தொடங்கினர். தாங்கள் செய்யக்கூடாது என்று இன்று வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றியும் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். சாதிப் பஞ்சாயத்துகளில் பெண்களும் பங்கேற்க ஆரம்பித்தனர். குடும்ப வன்முறை உள்ளிட்ட பல ஒடுக்குமுறைகளையும் எதிர்க்க ஆரம்பித்தனர். சொத்துரிமை உள்ளிட்ட பல உரிமைகளைக் கோரினர்.

ஆரோக்கியம் , பொதுவிநியோகம், கல்வி, கூலி மற்றும் பஞ்ச நிவாரணப் பணிகளின் மதிப்பீடுகள் ஆகியவற்றின் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. குறைந்த பட்ச கூலிகள் , நில ஆவணங்கள்,சொத்து மற்றும் சட்ட உரிமைகள், சொத்து ஆகியவை சமூக மற்றும் பாலினப் பாகுபாடுகளை எதிர்ப்பதற்கான கருவியாக மாறியது. பெண்கள் அவர்களின் உரிமைகளை தெரிந்து கொண்டனர்.விரைவிலேயே அவர்கள் ஊழல் நடைமுறைகளை தெரிந்து கொண்டனர்.அதன்பிறகு கிராமப்புற பெண் ஊழியர்களோடு இணைந்து நின்று சுரண்டலுக்கு எதிராக போராடினார்கள்.

ஆரம்பத்தில் அவர்களுக்கு ஆதரவு கிடைத்தது.பிறகு பெண்களின் சக்தி சமூக அடித்தளத்தை அசைத்தது. அதனால் அதிகார படிநிலையில் இருப்பவர்கள் மனவெறுப்பு அடைந்தனர். அதன் பிறகு பெண்களின் உறுதியான செயல்பாடுகள் மீது தங்களின் அதிகாரத்தை காட்டினர். ஆரம்பத்தில் இருந்தே இந்த திட்டத்துக்கு உள்ளே பல

முரண்பாடுகளும் அதிருப்தியும் இருந்தன. அவற்றை உள்ளேயே தீர்த்து கொள்ள முடியாத அளவுக்கு பிளவுகளை அது வளர்த்தது. கிராமப்புற பெண் ஊழியர்கள் மேலும் மேலும் விஷயம் தெரிந்தவர்களாக மாறினர். தங்களது வேலையிலும் சுரண்டலை உணர்ந்தனர். அதிகார படிநிலைகளில் இருப்பவர்களுக்கும் தங்களுக்குமான சம்பள முறையில் பல பாகுபாடுகளை உணர்ந்தனர்.இந்த முரண்பாடுகள் மேலெழும்பும் நிலை ஏற்பட்டது.

தகவல்களை பரப்புவதன் மூலமும், கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதன் மூலமும் கிராமப்புற பெண்களை ஆற்றல்படுத்துவது அதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவது என்பது இந்த திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நோக்கம், கிராமப்புற பெண் ஊழியரின் பணி என்பது மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருப்பது ஆகும். அரசு திட்டங்களை நிறைவேற்றுவதும் அது எதிர்பார்த்த அளவு எண்ணிக்கையில் பயனாளிகளை சென்று சேர்வதும் அவரின் பணிதான்.

அவர்கள் மிக மோசமான நிலையிலும் பணியாற்றியாக வேண்டும். அவர்கள் செய்தார்கள். அபாயமான சூழல்களிலும் அவர்கள் வேலை செய்தாக வேண்டும். அவர்களுக்கான மாத சம்பளம் 1600 ரூபாய். அதற்கு 1990களில் 200 ரூபாய் உயர்வு அளிக்கப்பட்டது. அதுவும் மகிளா விகாஸ் சங்கத்தின் முயற்சிக்கு பிறகு. இந்த மிக குறைவான சம்பளத்தோடும் பணி பாதுகாப்பு இல்லாமையும் இந்த வேலைக்கே உரிய அபாயமான வேலைச்சூழலும் சேர்ந்தே இருந்தது.

மனச்சாட்சியை தட்டி எழுப்பி விழிப்புணர்வு தருவது, அல்லது வரதட்சணை ,குழந்தை மணங்கள், கருவை ஆணா, பெண்ணாக என பார்த்து தேர்வு செய்தல் ஆகிய சமூக தீமைகளை எதிர்த்து பணியாற்றுவது என்பது மிகவும் அபாயமானது. குறிப்பாக, கிராம அளவில் நிலப்பிரபுத்துவ, சாதிய, ஆணாதிக்க அமைப்புகளுக்கு எதிராக பன்வாரி தேவி போராடினார். தன் சொந்த சமூகத்தில் இருந்த இத்தகைய சமூக தீமைகளை எதிர்க்கும் போதுதான் பன்வாரி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். பக்கத்து வீட்டுக்காரர்கள், நண்பர்கள்,உறவினர்கள் வீட்டுக்குள் நுழைந்து ஒரு குழந்தை திருமணத்தை தடுக்கவோ, வரதட்சணை வாங்குவதை தடுக்கவோ முயற்சிப்பதற்கு ஏராளமான தைரியம் வேண்டும்.அத்தகைய பணி செய்பவர்களுக்கு பணி பாதுகாப்போ,பணி பயன்களோ, நலத்திட்டங்களோ எதுவும் கிடையாது. போக்குவரத்து போன்ற அடிப்படையான தேவைகளும் அவர்களுக்கு செய்து தரப்பட வில்லை.அபாயகரமான வேலை செய்கிற இவர்களை அரசாங்கம் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் வைத்திருக்கிறது.

அமைப்பு சாரா தொழில்களில் உள்ள பெரும்பான்மையான பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத பணிச்சூழல் இருப்பது என்பது பெரிய மேலும் சிக்கலான பிரச்சனை.ஆனால் பன்வாரி தேவியின் போராட்டத்தால் பணி பாதுகாப்புக்கான வேலை சூழலுக்காக கிடைத்த சட்டம் பெண் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஓரடி முன்னேற்றமே.

## பாலியல் சித்ரவதை சட்டம்

பணியிடங்களில் பாலியல் சித்ரவதை (தடுத்தல்,தடைசெய்தல் மற்றும் தீர்வு ) சட்டம் –2013 ஏப்ரல் 22ல் சட்டமாக்கப்பட்டது.அது ஒரு குறிப்பிடத்தக்க தீர்வாகும். இச்சட்டம் பாலியல் சித்ரவதை இல்லாத பாதுகாப்பான பணிச்சூழலுக்கான பெண்களின் உரிமையை அங்கீகரிக்கிறது. அத்தகைய பணிச்சூழலை உறுதிப்படுத்த வேண்டியது வேலை அளிப்பவரின் கடமையாகும். இதில் ஏதேனும் மீறல்கள் இருந்தால் அவர்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும். பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் இந்த சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டது போல ஊதியம் அளிக்கப்படுகிற பிற பணியிடங்களையும் இது உள்ளடக்கியது,துவக்கத்தில் வேலைசெய்பவர், என்பதன் பரந்த விளக்கம் அமைப்பு சாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட வேலை செய்பவர்களை உள்ளடக்கியது.

“வேலை செய்பவர் என்பவர், ஒரு பணியிடத்தில் எந்த வேலைக்காகவும், தொடர்ந்த தற்காலிகமாக குறிப்பிட்ட காலத்துக்கு,தினக்கூலி அடிப்படையில் நேரடியாக அல்லது ஒரு ஏஜெண்ட்டு மூலமாக வரகூடிய ஒப்பந்த தாரர் உள்பட, வேலை தருகிற உரிமையாளருக்கு தெரிந்தோ, தெரியாமலோ, ஊதியத்துக்காகவோ அல்லது இல்லாமலோ, தன்னார்வ அடிப்படையில் வேலை செய்வதோ அல்லது பிற வழிகளில், வேலைக்கான அடிப்படை தெரிவிக்கப்பட்டோ அல்லது உள்ளடக்கப்பட்டோ, இணை வேலையாள், ஒரு ஒப்பந்த தொழிலாளி, பயிற்சித்தொழிலாளி, நிரந்தரம் இல்லாத பயிற்சி தொழிலாளி, அல்லது அத்தகைய ஏதோ ஒரு பெயரில் அழைக்கப்படும் ஒருவரையும் உள்ளடக்கியது.

உண்மையில் இந்தச் சட்டத்தை நடைமுறை ப்படுத்துவது என்பது மிகவும் சவாலானது ஆகும். பணியிடங்களுக்கு உள்ளே அமைக்கப்படுகிற புகார் கமிட்டிகளுக்கு ஒரு சிவில் நீதிமன்றத்துக்கான அதிகாரங்களை அளிப்பது என்பது சட்டரீதியான விவாதிக்க கூடியதாக இருந்தாலும், அமைப்புரீதியான துறையில் இத்தகைய கமிட்டிகளின் சிறப்பான செயல்பாடு என்பது பெரும்பாலும் அவற்றில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. பணியிடங்களில் பாலியல் சித்ரவதை என்பதை

பணியிடங்களில் ஏற்றத்தாழ்வான அதிகார உறவுகள் இருக்கின்றன, அந்த அதிகார படிநிலையில் பெண்கள் அடிமட்டத்திலும் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதாக பார்க்கப்பட வேண்டி இருப்பதால், புகார் கமிட்டிகளில் பெண் உறுப்பினர்களின் தேவையும் மற்ற உறுப்பினர்கள் ''பாலியல் சித்ரவதை சம்பந்தமான விவகாரங்களில் கையாண்ட அனுபவம் உள்ளவர்களாக'' இருப்பது என்பது இத்தகைய உணர்ச்சிப்பூர்வமான விஷயங்களை கையாளுவதற்கு அவசியம் ஆகும்.

உண்மையில் இந்த புதிய சட்டத்தில் உள்ள பெரிய குறை என்பது ''பொய்யான, தீங்கு தரக்கூடிய எண்ணத்தோடு தரப்படுகிற புகார்களை'' அளிக்ககூடிய பெண்களுக்கு அபராதம் விதிக்கக்கூடிய பிரிவு இருப்பதுதான். பிரிவு 14ல் உள்ள இந்த பிரிவு பாலியல் சித்ரவதை பற்றி புகார் தரக்கூடிய பெண்களின் துணிச்சலை தடுக்கிற விதமாக உள்ளது. இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 211 ஏற்கெனவே பொய்ப்புகார்களில் இருந்து குடிமக்களை பாதுகாக்கிறது. எனவே, இத்தகைய பெண் உரிமைகளை முதன்மையாக உறுதிப்படுத்துகிற சட்டத்தில் அத்தகைய குறிப்பிட்ட பிரிவை சேர்ப்பது என்பதை கவலையாக தான் பார்க்க வேண்டும். இந்த பிரிவை நீக்குமாறு பல்வேறு பெண்கள் அமைப்புகள் ஆண்டுதோறும் மனுக்கள், புகார்களை தந்து கொண்டு இருந்தாலும் புதிய சட்டத்தில் இது நீடிக்கவே செய்கிறது.அது சட்டத்தின் நோக்கத்தையே தாழ்த்துவதாக உள்ளது.

**நீதிபதி வர்மா கமிட்டி கீழ்வருமாறு கூறுகிறது.**

அத்தகைய பிரிவு இந்த சட்டத்தில் இருப்பது அவமதிப்பான ஒன்று. சட்டத்தின் நோக்கத்தையே அது ஒன்றும் இல்லாமல் செய்கிறது. இத்தகைய ஆத்திரமூட்டக்கூடிய பிரிவுகளை அறிமுகப்படுத்து வதை அனுமதிக்ககூடாது. சட்டத்தின் நோக்கத்தில் இத்தகைய பிரிவுகள் குறைவான சிந்தனையையே செலுத்துகின்றன.''

இத்தகைய பலமான பரிந்துரைகள் இருந்தாலும், இந்த சட்டப்பிரிவு பெண்களை வெறுக்கும் அணுகுமுறையை கொண்டுள்ளது. அது மேலும் பெண்களுக்கு பாதிப்புகளையே ஏற்படுத்த உதவும். சட்டத்தை பயன்படுத்துவதற்கு முன்னதாகவே அது தவறாக பயன்படுத்தப்படுவதற்கு எதிராக அளவுக்கு அதிகமான நஷ்டஈட்டை தருவது என்பது அந்த சட்டம் தனக்கு தானே தோல்வியடைந்து போவதற்கு உரிய முறையில் எழுதுவதாக இருக்கிறது.

**ஆதாரம்: June 8 2013, Vol XLVIII 2013, Economic and Political Weekly**

## உள்ளாட்சிகளுக்கு நிதி பெற 9 நிபந்தனைகள்

உள்ளாட்சித் துறைக்கு, மத்திய அரசின் மானியத்தைப் பெற, ஒன்பது நிபந்தனைகள் விதிக்கப்பட்டு உள்ளன. இவற்றை, நிறைவேற்றினால்தான், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத்தை, மத்திய அரசு வழங்கும் என, தெரிகிறது. இதுகுறித்து, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

உள்ளாட்சி துறைக்கு, 2011–12 முதல் மானியமாக, 1,067 கோடி ரூபாயை, மத்திய அரசு வழங்குகிறது. இதற்கு, ஒன்பது நிபந்தனைகளையும், மத்திய அரசு விதித்துள்ளது. கிராமப்புற ஊராட்சிகள், நகர்ப்புற ஊராட்சிகளுக்கு தனித் தனியாக, வரவு செலவு அறிக்கையை, தாக்கல் செய்ய வேண்டும். கணக்குகளை கணினி முறையில் சமர்ப்பித்து சரிபார்க்க, கணக்கியல் மென்பொருள் உள்ளிட்ட, முதன்மை தணிக்கை கணக்காயரால் தொகுக்கப்பட்ட, 8 படிவங்களை, செயல்படுத்த வேண்டும்.

ஆண்டு வாரியான தொழில்நுட்ப ஆய்வு அறிக்கை, உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆகியவற்றை, சட்டசபையில் தாக்கல் செய்ய வேண்டும். ஊராட்சிகளில் நடக்கும் முறைகேடுகளை விசாரித்து, நடவடிக்கை எடுக்க, விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டும்.
மத்திய அரசிடம் பெறும் நிதியை, ஐந்து நாள்களுக்குள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும். சொத்து வரி விதிப்பு அதிகாரத்தை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும். நகராட்சி, மாநகராட்சி ஆகியவற்றுக்கு உதவ, மாநில சொத்துவரி வாரியத்தை, அமைக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மூலம் வழங்கும், அத்தியாவசிய சேவைகளின் தரத்தை அறியும் முறையை, நிறுவ வேண்டும்.

மாநகராட்சிகளில் ஏற்படும் தீ விபத்துகளை எதிர்கொள்ள, அவற்றுக்கு மேலாண்மைத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும். இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்தால்தான், மாநில அரசின் நிதியை, உள்ளாட்சிகளுக்கு பெறமுடியும்.

மத்திய அரசின் நிபந்தனைகளை நிறைவேற்றி–விட்டதாகவும், உள்ளாட்சிகளுக்கான நிதியை, மத்திய அரசு அளிக்க வேண்டும் எனவும், தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

**ஆதாரம்: தினமலர், 2.4.2013**

# தனது சொந்த வெற்றிக்கு தானே இரையாகும் சட்டம்

**தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்கு அதுதான் காரணம் என்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் மீது பழி சுமத்தப்படுகிறது; அதைக் காரணம் காட்டி அதற்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடுகளில் கை வைப்பதற்கு ஆலோசிக்கப்படுகிறது.**

**– ரிச்சர்ட் மஹாபத்ரா, ஜிதேந்திரா**

மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (எம்ஜிஎன்ஆர்இஜிஏ) 2006ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டதிலிருந்தே அதனால் விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றும், விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைகிறது என்றும் பழி சுமத்தப்பட்டு வருகிறது. இதை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு இந்தச் சட்டத்தின் கீழ் வரும் வேலைத் திட்டங்களுக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடுகளை வெட்டுவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்தம் 1,66,760 கோடி ரூபாய் செலவில் 12,000 கோடி மனிதனால் பணிகளை இந்தத் திட்டம் உருவாக்கியுள்ளது.


கடந்த பத்தாண்டுகளில் மிகக் குறைவான பொருளாதார வளர்ச்சியையும், அதிகரித்து வரும் நிதிப் பற்றாக்குறையையும் சந்திக்கிற நிலையில், மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம், இந்த ஆண்டு பிப்ரவரியில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை கடுமையாக வெட்டுவதற்குத் திட்டமிட்டார். இத்திட்டத்தின் கீழ் வேலைகளுக்கான தேவை குறைந்து வருகிறது என்று அவர் வாதிட்டார். அவருக்கு ஆதரவாக நின்றார் விவசாய அமைச்சர் ஷரத் பவார். இந்தத் திட்டத்தினால் விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை என்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது, அதனால் ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்று பவார் கூறினார். கூலி விகிதம் அதிகரிப்பதற்கும், விவசாயம் லாபகரமானதாக இல்லாமல் போவதற்கும்தான் இந்தத் திட்டம் வழிவகுத்துள்ளது என்றும் அவர் கூறினார். இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, விவசாயக் கூலி உயர்ந்துவிட்டதால், விவசாயிகளுக்கான கூலி மானியம் 50 சதவீதமாகிவிட்டது என்றும் அவர் 2011ல் கூறினார்.

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடந்த 5 அமைச்சரவைக் கூட்டங்களில் இரண்டு அமைச்சர்களுமே இப்பிரச்சனையை கிளப்பினார்கள். பிப்ரவரி 6 அன்று ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், இந்த இரண்டு அமைச்சர்களின் கருத்துகளுக்கும் மறுப்புத் தெரிவித்து பிரதமருக்கு கடிதம் எழுதினார். தினசரிக் கூலி அதிகரிப்பது என்பது இந்தத் திட்டத்தின் ஒரு ஆக்கப்பூர்வமான தாக்கமாகும் என்று ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டார்.

அமைச்சர்களுக்கிடையேயான இந்த மோதல், இப்படிப்பட்ட கூலி அடிப்படையிலான திட்டம் குறித்து, விவசாயத் தொழிலாளர் சந்தையில் அதன் தாக்கம் குறித்து பெரிதாகக் கிளப்பிவிடப்படும் அச்சத்தின் மீது கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால், இந்த விவாதம் பெரும்பாலும் ஒரு மாயத் தோற்றத்தையே ஏற்படுத்தப்படுத்த முயல்வதாகவே தெரிகிறது.

எம்என்ஆர்இஜிஏ சட்டத்தால் விவசாயத் தொழிலாளர்கள் கிடைப்பது பாதிக்கப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டை அரசாங்கத்தின் புள்ளிவிவரங்களே மறுக்கின்றன. விவசாயம் நன்றாக நடந்துகொண்டிருக்கும் பருவங்களில் யாரும் இந்தத் திட்டத்தின் கீழ் வேலைக் கேட்டகப் போவதில்லை. மற்ற பொது கூலித் திட்டங்களைப் போல அல்லாமல், தேவையின் அடிப்படையிலேயே இந்தச் சட்டம் இயங்குகிறது. விவசாய காலங்களில் மக்கள் வேலை தேட மாட்டார்கள் என்ற ஊகம் முன்வைக்கப்படுகிறது. 2010–11ம் ஆண்டின் விவரங்களை ஆராய்கிறபோது, ஏப்ரல் – ஜூன், ஜனவரி – மார்ச் ஆகிய காலகட்டங்களில் சுமாரான விவசாயப் பணிகள் நடந்துகொண்டிருந்தபோதும் கூட, 70 சதவீத வேலைகளுக்குக் கோரிக்கைகள் வந்தன என்று தெரிய வருகிறது. மேலும், 2007 – 08ல் இந்தச் சட்டம் இந்தியா முழுவதுமாகற் செயல்படத் தொடங்கியதிலிருந்து, ஒவ்வொரு குடும்பத்திற்குமான சராசரி வேலை என்பது ஓராண்டில் 54 நாட்கள் என்பதை தாண்டவில்லை. ஆகவே, விவசாயக் காலத்தில் மக்கள் 16 நாட்கள் மட்டுமே (இத்திட்டத்தின் கீழ்) வேலை செய்துள்ளனர். பன்னாட்டு நீர் நிர்வாக நிறுவனம் 12 மாநிலங்கள் தொடர்பாக தயாரித்துள்ள ஒரு விரிவான அறிக்கையில், இந்தத் திட்டத்தின் மூலம் தொழிலாளர் சந்தையில் ஒரு பெரிய தாக்கம் ஏற்பட வேண்டுமென்றால், விவசாயம் உச்சத்தில் இருக்கிற காலகட்டத்தில் கனிசமான மக்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வேலை செய்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளது. ஆந்திர மாநிலத்தில் ஓராண்டில்

சராசரியாக 35 லட்சம் பேர் வேலைக் கோருகிறார்கள். ஆனால், விவசாயக் காலத்தில் இந்த எண்ணிக்கை 5 லட்சமாக சுருங்கிவிடுகிறது என்கிறார் இந்த மாநிலத்தின் முன்னாள் எம்ஜிஎன்ஆர்இஜிஏ இயக்குநர் ஏ. முரளி. இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படும் மாநிலமாக ஆந்திரா கருதப்படுகிறது. 2005ம் ஆண்டில் 1 கோடியே 60 லட்சமாக இருந்த இந்த மாநிலத்தின் விவசாய உற்பத்தி, 2012ம் ஆண்டில் 2 கோடியே 20 லட்சமாக அதிகரித்தது. இந்தச் சட்டத்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டது என்ற கருத்துக்கு இந்தப் புள்ளிவிவரம் ஆதரவாக இல்லை என்கிறார் முரளி.




விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை குறைவது என்பது இந்தத் திட்டம் தொடங்குவதற்கு முன்பே இருந்து வந்துள்ளது. திட்டக்குழு தனது 12வது திட்ட ஆவணத்தில் இதனைத் தெரிவித்துள்ளது. பயிர் வளர்ப்பு தீவிரமாக அதிகரித்ததால், விவசாய விளைச்சலில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை என்றும் திட்டக்குழு கூறுகிறது. 2000வது ஆண்டிலிருந்தே, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளில், விவசாய வேலைகள் குறைந்து வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதற்கோ, அதற்கு இந்தச் சட்டத்தின் தாக்கம்தான் காரணம் என்பதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் கூறுகிறது.

உதாரணமாக, பிஹார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வரும் தொழிலாளர்களையே பெரிதும் தனது விவசாயத்திற்கு நம்பியிருக்கும் மாநிலமான பஞ்சாப்பில், இந்தச் சட்டத்தால் விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டதாக கூறப்பட்டது. அதற்குக் காரணம் அந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் தங்களது மாநிலங்களிலேயே வேலை செய்ய விரும்பியதுதான் என்றும் கூறப்பட்டது. பிற மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்து வந்து வேலை செய்யும் தொழிலாளர்கள் பற்றிய ஆவணப் பதிவு எதுவும் பஞ்சாப்பில் கிடையாது. எனினும், சண்டிகார் நகரில் உள்ள ஊரக மற்றும் தொழில் மேம்பாட்டு ஆய்வு மையம் மேற்கொண்ட ஒரு மதிப்பீடு, பஞ்சாப்பிற்கு புலம்பெயர்ந்து வருகிற தொழிலாளர்கள் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று காட்டுகிறது. அதேபோல், உத்திரப்பிரதேசம், பிஹார் ஆகிய இரு மாநிலங்களிலும் இந்தச் சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்கிறபோது, பஞ்சாப் மாநிலத்தின் விவசாயப் பணிகளை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்த இரு மாநிலங்களில் வேலைக்கான கோரிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கவில்லை என்று தெரிய வருகிறது. 2011–12ம் ஆண்டில் 9 சதவீத குடும்பங்கள் மட்டுமே வேலை கோரியுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 38 நாட்கள் மட்டுமே வேலை கிடைத்துள்ளது. "விவசாயத் தொழிலாளர் நெருக்கடி என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது," என்று பிஹார் ஜன் ஜக்ரான் சக்தி சங்காதன் அமைப்பைச் சேர்ந்த ஆஷிஷ் ஜா கூறுகிறார்.

விவசாயக் கூலி விகிதம் அதிகரிப்பதைப் பொறுத்தவரையில், ஒரு பக்கம் அரசாங்கம் ஏழை மக்களின் அதிகாரம் இதனால் அதிகரித்துள்ளது என்று கொண்டாடிக்கொண்டிருக்கிறது. ஆனால், இன்னொரு பக்கத்தில் விவசாய அமைச்சகம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தால் கூலி விகிதம் அதிகரித்துள்ளது என்று மத்திய புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தெரிவித்துள்ளது. 1999 – 2005 காலகட்டத்தில் கூலி விகிதமானது ஆண்டுக்கு 2.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு 2006 – 09 காலகட்டத்தில் கூலி விகிதம் ஆண்டுக்கு 9.7 சதவீதமாக அதிகரித்துவிட்டது.


கூலி அதிகரித்ததன் காரணமாக உற்பத்தி செலவு அதிகரித்துவிட்டது, கூலிக்கு ஆட்களை நியமிக்கும் ஆர்வம் மக்களிடையே குறைந்துவிட்டது என்று ஒரு பொதுவான அச்சம் ஏற்பட்டுள்ளது. ஆனால், ''இந்தத் திட்டம் தொழிலாளர்களிடையே குறைந்தபட்ச கூலி கோருவதற்கான உரிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது,'' என்கிறார் தில்லி ஐஐடி நிறுவனத்தின் பொருளாதார ஆய்வாளரான ரீத்திகா கேரா. இது ஒரு வெற்றி என்றே அரசு கூறுகிறது. கடந்த காலங்களில் விவசாயிகள் தரப்பிலிருந்து தரப்பட்ட நிர்ப்பந்தங்கள் காரணமாக குறைந்தபட்சக் கூலியை உயர்த்துவதற்கு அரசு தயங்கிவந்தது.

கூடதல் கூலி வேண்டும் என்று கோருவதற்கான ஒரு சரியான பேரம் பேசும் கருவியை இந்தத் திட்டம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. 19 மாநிலங்களில், இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அடிப்படையான கூலி, அந்த மாநிலங்களின் விவசாயக் கூலித் தொகையைவிட அதிகமாகும். ஆனால், திட்டத்தின் இந்த தாக்கம் குறித்து யாரும் கண்டுகொள்வதில்லை. முதலாவதாக, இந்தத் திட்டம் ஆண், பெண் இருவருக்குமே சமமான கூலி வழங்குவதற்கான விதியை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாவதாக, முதல் விதியின் பலனாக பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது. மொத்த வேலை வாய்ப்பில் 45 சதவீதம் வரை பெண்களுக்குக் கிடைத்துள்ளது.

''பெண்களுக்கு சமமான ஆதாயத்தை வழங்கியுள்ள முதல் திட்டம் இது,'' என்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பலோமி மிஸ்த்ரி கூறகிறார். இன்னொரு பக்கத்தில், கூலி உயர்வு இன்னும் பல மடங்காக இருந்திருக்க வேண்டும் என்றும் பலர் கருதுகிறார்கள். மத்திய பிரதேச மாநிலத்தில் இயங்கி வரும் ஜக்ரிதி ஆதிவாசி தலித் சங்காதன் என்ற அமைப்பைச் சேர்ந்த மாதுரி, ''இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட போதெல்லாம், தொழிலாளர்களிடையே மனச் சோர்வு ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், கூலி வழங்குவதில் செய்யப்படும் தாமதத்தாலும், பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகள் இல்லாததாலும்தான் திட்டம் தோல்வியடைந்திருக்கிறது,'' என்று கூறுகிறார்.


## பயன்படுத்துவோர் குறைவு

**எம்ஜிஎன்ஆர்இஜிஏ திட்டத்தின் கீழ் வேலை கோருவது குறைந்துள்ளது**




## பயனடையும் தொழிலாளர்

**எம்ஜிஎன்ஆர்இஜிஏ திட்டத்தின் கீழ் கூலி விகிதம் அதிகரிக்கிறது**




*ஆதாரம்: ஊரக மேம்பாட்டு அமைச்சகம்*

மத்திய பிரதேச மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் மக்களின் உரிமைகளுக்காக செயல்பட்டு வருபவரான அனுராக் மோதி, கூலி தாமதப்படுத்தப்படுகிற பிரச்சனை தீர்க்கப்படுமானால், மேலும் அதிகமான நிதிப் பலன்கள் ஏற்பட முடியும் என்று கூறுகிறார். பல்வேறு துறைகளுக்கிடையே கூலி விகிதங்களில் உள்ள குறைபாடுதான் முக்கியமானப் பிரச்சனை என்கிறார் அவர்.

''கட்டுமானத் தொழிலில் குறைந்தபட்சக் கூலி ரூ.190 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திலோ ரூ.132, விவசாயக் கூலியாக ரூ.100ம் மட்டுமே வழங்கப்படுகிறது. கூலி மிக தாமதமாக வழங்கப்படுவதும் இத்திட்டத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்தியுள்ளது. இதனால், புலம்பெயர்ந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது,'' என்கிறார் அவர்.

**ஆதாரம்: March 1-15, 2013 . Down To Earth**

# இது பெண்களுக்கான பட்ஜெட்டா ?

**இந்த நிதிநிலை அறிக்கையில் மறைமுகமாகவும் நேரடியாகவும் இருக்கிற பல கொள்கைகள் பெரும்பாலான பெண்களுக்கு விரும்பத்தகாத விளைவுகளைத் தரக்கூடியதாக இருக்கிறது**

**– ஜெயதி கோஷ்**

சில விஷயங்களைப் பற்றி எவ்வளவு பேசப்படுகிறது ? எப்படி எல்லாம் பேசப்படுகிறது ? அதனால் அந்த விசயங்களை பற்றி மக்கள் மத்தியிலே பொதுவான கருத்தும் உருவாகிறது.ஆனால் அவை எல்லாம் யதார்த்தத்தில் இருந்து ரொம்ப தூரமாய் இருக்கிறது என்பதை குறிப்பிட்டு சொல்ல வேண்டி இருக்கிறது.

நாம் 24 மணிநேரமும் செய்திகளை கேட்டுக்கொண்டே இருக்கிற ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். தொடர்ச்சியாக செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. அந்த செய்திகளின் முழு விபரங்களையும் அவற்றின் தாக்கங்களையும் முழுமையாக தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைப்பதற்கு முன்பாகவே அத்தகைய செய்திகளை தொடர்ந்து சொல்ல வேண்டிய கட்டாயத்தில் செய்தியாளர்கள் உள்ளனர்.

மத்திய அரசின் 2013–14 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை ஊடகங்கள் எப்படிப் பார்த்துள்ளன என்பது மேலே சொன்ன எல்லாவற்றுக்குமான ஆதாரமாக உள்ளது. பெண்களுக்கான ஒரு பட்ஜெட்டாக இது வர்ணிக்கப்–படுகிறது. அரசாங்கம் மற்றும் ஆளுங்கட்சியின் செய்தித் தொடர்பாளர்கள் அடம் பிடித்தாற்போல அப்படித்தான் இதை அறிவிக்கிறார்கள். சில பொருளாதார அறிஞர்களும் அப்படித்தான் இந்த பட்ஜெட்டை வலியுறுத்தினர்.அவர்கள் நிதி அமைச்சர் அவரது உரையில் அறிவித்த அறிவிப்புகளை தாண்டிப் போகவில்லை.

நிதியமைச்சரின் உரையில் முழுக்க பெண்களைப்பற்றிய குறிப்புகள் இருந்தன என்பது உண்மைதான். பெண்களைப் பற்றிய நிதியமைச்சரின் அக்கறை அவரையும் மீறி வெளிப்பட்டது. நிதியமைச்சரின் சில அறிவிப்புகளை மேஜையைத் தட்டி பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். அவர்கள் அவரின் உணர்வுகளோடு ஒத்துப்போனதைப் போல த் தோன்றியது.

நிதியமைச்சரின் அத்தகைய அறிவிப்புகளில் சிலவற்றை பார்ப்போம்.‘‘ தனித்து வாழ்வோர் மற்றும் விதவைகள் உள்ளிட்ட பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள். அவர்கள் சுய கவுரவத்தோடும் கண்ணியத்தோடும் வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இளம் பெண்கள் எல்லா இடங்களிலும், குறிப்பாக பணியாற்றும் இடங்களில் பாலின பாகுபாடுகளை சந்திக்கின்றனர். பெண்களுக்கு பாதுகாப்பையும் கண்ணியத்தையும் ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பொறுப்பு நமக்கு இருக்கிறது. சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகள் நமது சுதந்திரமான,முற்போக்கான தன்மைகள் மீது ஒரு கறையாக விழுந்துள்ளது. கல்வி,வேலை,மற்றும் சேவைகளை அணுகுவதற்காக மேலும் மேலும் அதிக பெண்கள் பொது இடங்களுக்குள் நுழையும் போது அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகமாக நடக்கிற செய்திகள் வெளியாகின்றன. நாம் நமது பெண்களோடும் பெண்குழந்தைகளோடும் இணைந்து நிற்போம். அவர்களுக்கு நமது ஆதரவை தெரிவிப்போம். அவர்களை அதிகாரமுள்ளவர்களாக மாற்றுவதற்கான சகல முயற்சிகளையும் செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். அதே நேரம் அவர்களை பாதுகாத்து வைத்திருக்கவும் வேண்டும்.‘‘

உண்மையில் நல்ல வார்த்தைகள்தான்.பெண்களுக்கு எதிராக அதிகரித்துவரும் வன்முறைகளைக் கண்டித்து நாடு முழுவதும் பல மாதங்களாக மக்கள் இயக்கங்கள் நடந்தன. அவற்றுக்குப் பதிலாக மிகக் குறைவாகத்தான் இந்த அரசாங்கம் செயல்பட்டுள்ளது. அதன் மிக முக்கிய பிரதிநிதியிடம் இருந்து வந்துள்ள தைரியமான வார்த்தைகள் தான் இவை. ஒருவேளை கொஞ்சம் சுயநலமான வார்த்தைகளாகக் கூட இருக்கலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட வர்மா கமிட்டியின் பரிந்துரைகள் சிறப்பானவை.அவற்றிற்கு எதிர்விளைவாக, உணர்ச்சியற்ற, ,ஒரு கொடூரமான அவசர சட்டத்தை பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்கொள்ள பொருத்தமானது என மத்திய அரசு கொண்டு வந்தது

## வார்த்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துவிட்டோம்

நிதியமைச்சர் பெண்களுக்கு அப்படி என்னதான் உண்மையிலேயே தந்து விட்டார் ? மதிக்கக்கூடிய விஷயங்கள் கொஞ்சம்தான் பெண்களுக்கு வந்து சேர்கிறது. அதுவும் ஒரு தானம் கொடுப்பவர் மனப்பான்மையோடும் அடாவடித்தனமாக அணுகு முறையோடும் தரப்படுகிறது. இத்தகைய ‘‘பரிசுகள்’’ குறிப்பிட்ட வாக்காளர் பிரிவினரை தங்களிடமிருந்து

விலகிவிடாமல் இருக்கச்செய்து அவர்களை திருப்திபடுத்தும் என அவர் நினைக்கிறார் போல தெரிகிறது. இந்த பட்ஜெட்டில் விரிவாக விவாதிக்கப்பட்ட இரண்டு முன்முயற்சிகள் பெண்களின் மீதான அக்கறை மத்திய அரசுக்கு இருப்பதற்கான அடையாளங்களாக சமர்பிக்கப்பட்டுள்ளன. அவை இரண்டுமே பெண்களை ஓட்டு வங்கியாகவோ அல்லது பாதிக்கப்பட்ட குழுவாகவோ பார்க்கிற அடிப்படையான தப்பை செய்கின்றன. அதனால் பெண்களின் பெயரில் ஒரு பெரிய அளவு நிதியை ஒதுக்கீடு செய்வதன் மூலம் அது பெண்களை தாஜா செய்ய முடியும் என நம்புகிறது.

### அடிப்படையான அக்கறை இல்லாமல் இருப்பது

முதலாவதாக இந்தத் திட்டம் பெண்களுக்கான ஒரு வங்கியை உருவாக்குகிறது. இந்த வங்கி பெரும்பாலும் பெண்களுக்கு தான் கடன் வழங்கும். பெண்கள் நடத்துகிற தொழில்களுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும் கடன் வழங்கும். அதன் மூலம் பெண்களுக்கான வாழ்வாதாரத்துக்கு உதவும். பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை கணக்கில் கொண்டு அவர்களுக்கு அதிகாரமளிக்கவும், நிதிரீதியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் கூடிய விவகாரங்களை இது எதிர்கொள்ளும். இந்த வங்கிக்கு ஆரம்ப முதலீடாக ஆயிரம் கோடி ரூபாய்களை மத்திய அரசு வழங்கும்,

இந்த ஐடியா ஒரு அடிப்படையான விஷயத்தை தவறவிடுகிறது.ஏறத்தாழ எல்லா பெண்களும் நிறுவனமாக்கப்பட்டுள்ள நிதியை அணுகுவதில் சிரமங்களை அனுபவிக்கின்றனர். அந்த நிதிமுறையின் சாதாரண பயனாளர்களை (ஆண்கள்) விட எப்போதாவதுதான் பெண்கள்அரிதாக சமமாக நிதி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றனர். அதற்கு பதிலாக பெண்கள் தாழ்வானவர்களாக தனித்து பார்க்கப்படுபவர்களாக தான் எப்போதும் பார்க்கப்படுகின்றனர்.

இந்த நடத்தை இந்தியாவின் மைக்ரோ பைனான்ஸ் அமைப்பில் எங்கும் இருக்கிறது. பெண்களுக்கு மிகவும் பயன்படுவதாக சொல்லப்படுகிற திட்டமான சுயஉதவிக்குழுக்கள் – வங்கிகள் தொடர்பிலும் இத்தகைய நடத்தை உள்ளது. சொல்லப்படாத அல்லது அதன் அடியில் கிடக்கிற விஷயம் என்னவென்றால், ஆண்கள் (அல்லது பணக்காரர்கள்) முறையான நிதி நிறுவனங்களை அணுகலாம். பெண்களுக்கு (அல்லது ஏழைகளுக்கு) மைக்ரோ பைனான்ஸ் போன்ற நிதி உதவிகள் கிடைக்கும். இந்த தெளிவில்லாத பின்னணிக் காட்சியில் தான் பெண்களுக்கு மட்டும் கடன் வழங்கும் வங்கி உருவாக்கப்படுகிறது. அனைத்து நிதி நிறுவனங்களிலும் அனைத்துப் பெண்களும் அணுகக் கூடிய வாய்ப்புகளை முக்கிய முன்னுரிமைக் கொள்கையாக ஆக்காமல் அதனை அமலாக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவர்களுக்கான தனி வங்கி என்ற முறையில் ஒரு சிறு இடம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. எல்லாம் அவர்களுக்கு. அனைத்து பணியாட்களும் பெண்கள்.

நிறுவனமாக்கப்பட்ட நிதியை பெண்கள் அணுகுவதை இத்தகைய முறையிலான அடையாளபூர்வமான முறைகள் மூலம் கட்டுப்படுத்தி வைப்பது என்பது எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். வணிக வங்கிகளில் கணக்குகள் திறக்கவும், கடன்களைப் பெறவும் பெண்களுக்கு வாய்ப்புகள் உள்ளது. அந்த வணிக வங்கிகள் இனி பெண்களுக்கு மட்டுமே கடன்கள் தர உள்ள வங்கிக்குச் செல்லுமாறு பெண்களை கேட்டுக்கொள்ளலாம். அங்கேதான் அர்ப்பணிப்பு மிக்க சேவை கிடைக்கும் என்றும் சொல்லப்படலாம். இத்தகைய நிதிரீதியான ஒதுக்கி வைத்தலை எப்படி பொருளாதார ரீதியாக பெண்களை விடுதலை செய்வதை நோக்கிய முன்னேற்றமாக பார்க்க முடியும்? இத்தகைய அராஜகமான தன்மை கொண்ட முன்மொழிவு பொதுமக்கள் முன் சமர்ப்பிக்கப்படும் முன்பாக அரசாங்கத்தில் உள்ள யாருக்கும் உறைக்கவில்லையா?

பெண்கள் பற்றிய உணர்வு இல்லாமல் இரண்டாவது நடவடிக்கையும் மேலும் மோசமானதாக இருக்கிறது. அது ஒரு நிதியத்தை உருவாக்கும் ஆலோசனை. (நிர்பயா நிதி என்று அதை நாம் அழைப்போம் என அமைச்சர் கண் கொட்டாமலும் வெட்கப்படாமலும் சொன்னார்.) பெண்ணின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 1000 கோடி ரூபாய் முயற்சி. இது உண்மையான பிரச்சனையை புரிந்து கொள்ளாத முயற்சி. பெண்கள், சிறுமிகளின் பாதுகாப்பு – உண்மையில் ஆண்கள். பையன்கள்,குழந்தைகள், வயதானவர்கள் என அனைவரின் பாதுகாப்பும் – அரசின் பொறுப்பு ஆகும். உடல் ரீதியான பாதுகாப்பு என்பது ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் உரிமை ஆகும். தங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பவர்களுக்கு நன்றியாக இருக்கவேண்டிய பெண்களுக்கு "கவலைப்படுகிற" ஒரு அரசாங்கம் தருகிற "பரிசு" அல்ல இது.

கடந்த சில மாதங்களாக இந்தியா முழுவதும் மக்கள் போராட்டங்கள் வெடித்தன. அரசு தனது குடிமக்களை காப்பதற்காக செயல்பட்டுக் கொண்டு இருக்கிற சமூக

ரீதியான, சட்டரீதியான, நிறுவன ரீதியான, பண்பாட்டு ரீதியான தளங்களில் அது தோல்வியடைந்துவிட்டதை எதிர்த்தே அந்த ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இத்தகைய ஆர்ப்பாட்டங்களால் நாட்டில் உள்ள அனைவரும் ஈர்க்கப்பட்டனர். பெண்களுக்கு எதிராக தினசரி வெளியாகும் வன்முறைகளின் கொடூரமான யதார்த்தத்தாலும் நாட்டு மக்கள் மனம் பாதிக்கப்பட்டனர். அரசும் அரசு சாரா செயல்பாட்டாளர்களும் பன்முக செயல்பாட்டில் இறங்க வேண்டும் என மக்கள் வெளிப்படையாகக் கோரினர்.

வர்மா கமிட்டியின் பரிந்துரைகளில் இந்த விவகாரம் பற்றிய சில முக்கியமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. மற்றவற்றுக்கு மத்தியில், நடைமுறைப் போக்குகளை, அமைப்புகளை ,நடத்தைகளை மாற்றி அமைக்க வேண்டிய தேவை மட்டுமல்ல, பொது சேவைகள், உள்கட்டமைப்புகள் கிடைப்பது என்பதன் பாத்திரம் வகித்ததன் பங்கு பற்றியும் பேச வேண்டியுள்ளது. இந்த விவகாரத்தில் உண்மையாகவே அக்கறை கொண்ட அரசாங்கமாக இருந்தால் வர்மா கமிட்டியின் பரிந்துரைகளை ஆழமாக பார்த்து இருக்கும். அரசிடம் உள்ள பிரச்சனையின் விரிவான தன்மை ,சிக்கலான நிலை, அவற்றைப் தீர்ப்பதற்கான அவசரத் தேவைகளை அது உணர்ந்து இருக்கும். இதன் பின்னணியில் இந்த ஆயிரம் கோடிரூபாய் நிதி ஒதுக்கீடு என்பது ஏறக்குறைய ஒரு அவமதிப்பே.

உண்மையில் நிதியமைச்சரின் உரையின் பெரும்பகுதி மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே பிறப்பெடுத்த மாதிரியாக தன்னைத் தானே நினைத்துகொள்ளும் மத்திய அரசின் இயல்பான போக்கோடும், நன்றியுள்ள வாக்காளர் பிரிவுக்கு ரொட்டித்துண்டுகளை வழங்கி உணர்ச்சி வயப்படுத்த முயலும் தன்மையோடும் இருந்தது. அதுவும் அவரது உரையின் கடைசிப்பகுதி இந்த தன்மைக்கு நல்ல சான்றாகும். அது அவரே சொன்னது போல மான்யங்களை பணமாக தருகிற நேரடி பயன்கள் பரிமாற்றம் பற்றியது. மக்களின் மீதான அக்கறை எப்படி அரசாங்கத்துக்கு இருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

நிதிஅமைச்சர் இந்தியாவின் ஏழை மக்களை பார்த்து கீழ்க்கண்டவாறு சொல்ல வேண்டியிருக்கும் "எங்களைச் சுற்றி சிரித்த முகத்தோடு இருக்கிற தலித் இளம்பெண்களையும் பழங்குடி வாலிபர்களையும் நாங்கள் பார்க்கிறோம். அவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் கிடைத்துள்ளன. கர்ப்பிணிப் பெண்களின் முகத்தில் சந்தோஷத்தைப் பார்க்கிறோம். அவர்களுக்கு தாய்–சேய் நல பராமரிப்பையும் ,குழந்தை பிறப்பதற்கு முன்பாகவும் பின்பாகவும் செய்ய வேண்டிய பராமரிப்பு களையும் நாங்கள் செய்துள்ளோம்" தன்னை சுற்றி பயம் கலந்த பணிவோடு மற்றவர்கள் இருக்க வேண்டும் என்கிற நிலையை உருவாக்கும் இந்த நிதிநிலை அறிக்கைக்கு இதற்கு மேலும் விமர்சனம் தேவையில்லை.

மற்றவர்களை தாழ்வாக நடத்தும் இத்தகைய நடத்தை அரசாங்கத்தில் உள்ள மற்றவர்களிடம் இல்லை என்பது நம்பிக்கையாக உள்ளது. அரசிடம் இருக்கும் விழிப்புணர்வை விட அதிகமான வளர்ச்சி இந்த நாட்டின் வாக்காளர்கள் மத்தியில் இருக்கிறது. அரசின் கடமைகள் நமது அரசியல் சாசனத்தில் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சாசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தங்களது உரிமைகள் மற்றும் சமூக ஒப்பந்தம் பற்றி பரம ஏழைகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட இந்திய குடிமக்கள் தற்போது அதிகமான விழிப்புணர்ச்சியைப் பெற்றுள்ளனர். இத்தகைய அடிப்படைக் கடமைகளை செய்வதில் தொடர்ந்து தவறுகிற நமது அரசாங்கங்களைப் பற்றியும் அவர்கள் நல்ல விழிப்புணர்வோடு உள்ளனர். அனுதாபத்தால் நெஞ்சில் ரத்தம் வடிவது போல வெளியிடப்படும் அறிக்கைகளால் அவர்களின் மனதைக் கவர முடியாமல் போகலாம். நிதிக்கொள்கைகள் உள்பட பட்ஜெட்டில் பொதிந்து வைக்கப்பட்டுள்ள அரசின் கொள்கைகளின் தாக்கங்களை மதிப்பிடவும் மக்களால் இயலும். இந்த இடத்தில்தான் எல்லா நிதி அமைச்சர்களின் தேன்தடவிய அறிக்கைகளும் வெற்று வார்த்தைகளாகி போகின்றன. இந்த நிதிநிலை அறிக்கையில் மறை முகமாகவும் நேரடியாகவும் இருக்கிற பல கொள்கைகள் பெரும்பாலான பெண்களுக்கு விரும்பத்தகாத விளைவுகளைத் தரகூடியதாக இருக்கிறது. இந்த ஆண்டு கவனம் செலுத்தப்பட்ட நிதிநிலைமையை பலப்படுத்தும் முயற்சிகளும், பட்ஜெட்டில் இருக்கிற அத்தகைய முயற்சிகளும், பெண்கள் உள்ளிட்ட இந்திய குடிமக்களின் பொருளாதார நிலைமைகள் மீதான நேரடித் தாக்குதலாக அமைகிறது. ஏனென்றால் குடிமக்கள் தங்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை அடைவதற்கு தேவையான அத்தியாவசிய பொதுப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்த பட்ஜெட் வெட்டுகிறது.

## பொதுவான பணிகளுக்கான செலவை வெட்டுதல்

அத்தியாவசிய உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் என்பது எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும். ஒட்டுமொத்த மக்களின் உற்பத்தி ஆற்றலை மேம்படுத்தும். வெளிநாட்டில் இருந்து ஏற்றுமதிக்கான தேவைகள் உள்நாட்டுக்கு வருவது பிரச்சனையாக மாறிவருகிறபோது உள்நாட்டில் நல்ல முறையில் சரக்குகளுக்கான தேவையை அதிகரிக்க செய்யும்.மக்கள் பெருமளவில் பயன்படுத்துகிற அத்தியாவசிய பண்டங்களின் விலையை சற்று நிலையாக இருக்க செய்வதில் உறுதி செய்யும். குறிப்பாக இந்தியாவில்

அத்தகைய அடிப்படையான உள்கட்டமைப்புகள், சமூக பணிகளை வழங்குவதில் மிகப்பெரும் அளவில் பற்றாக்குறை உள்ளது என்பது கூடுதலான விஷயம். இவை வாழ்க்கை நிலைமைகள் மீது நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.தங்களது அன்றாட வாழ்வில் இத்தகைய உள்கட்டமைப்புகளின் பற்றாக்குறையால் ஏற்படுகிற விளைவுகளை பல்வேறு வழிகளில் எதிர்கொள்கிற பெண்கள்தான் குறிப்பாக அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அத்தகைய பொதுவான பணிகளுக்கான நிதிகளை வெட்டுவது அல்லது ஏற்கெனவே பற்றாக்குறையாக இருப்பதை அதிகரிக்க விடுவது ஆகியவை நேரடியான எதிர்மறையான விளைவுகளை முழுமையாக ஏற்படுத்துகின்றன.

அதனால் இந்த ஆண்டின் நிதி பற்றாக்குறை ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவான, உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 5.2 சதவீதத்துக்கு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இந்தாண்டின் சாதனையாகும். மிகவும் தேவையான செலவான திட்டங்களுக்கான செலவை கடுமையாக குறைத்ததன் மூலம் இது சாதிக்கப்பட்டு இருப்பதுதான் பிரச்சனை ஆகும். 2012–13 ஆம் ஆண்டு பட்ஜெட்டின் மதிப்பீடுகளுக்கும் இருபது சதவீதத்துக்கும் கீழாக திட்டங்களுக்கான செலவுகள் இருப்பதாக தற்போதைய நிதியாண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மக்களின் நல்வாழ்வையும் வாழ்க்கைத் தரத்தையும் நேரடியாக பாதிக்கக்கூடிய துறைகள் உள்ளிட்டு அனைத்துத் துறைகளிலும் நிதி ஒதுக்கீட்டில் வெட்டுகள் விழுந்ததன் விளைவு இது. சில துறைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. அதன் முன்பே தீர்மானிக்க முடியாத அவற்றின் விளைவுகளை நம்மால் இனிதான் அறியமுடியும். உதாரணமாக, நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக்கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான உண்மையான செலவினம் என்பது பட்ஜெட் தொகையோடு ஒப்பிடும்போது மூன்றில் ஒரு பகுதியாக மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. தொழில் மற்றும் கனிம வளம், ,விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு துறை ஆகிய முக்கியமான துறைகளும் தீவிரமான நிதிவெட்டுகளில் சிரமப்படுகின்றன. விவசாயமும்,ஊரக மேம்பாடும், ஆரோக்கியம், கல்வி ஆகியவையும் கூட பட்ஜெட் ஒதுக்கீடுகளை ஒப்பிடும்போது தீவிரமான நிதி வெட்டுக்களுக்கு ஆளாகி உள்ளன.

சமூகத்துக்குத் தேவையான அவசியமான பணிகளை மக்களுக்கு செய்வதை "திட்டங்கள்"என்ற வகையில் அரசாங்கம் செய்வதும்,குடிமக்களின் உரிமைகள் என்ற முறையில் இல்லாமல் அரசாங்கம் தரும் பரிசுகள் என்ற முறையில் செயல்படுவது உலகிலேயே இந்தியா மட்டும்தான் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் .நாம் அத்தியாவசியமான சுகாதார பணிகளை மக்களுக்குத் தரமாட்டோம். பிறகு அதை ஒரு திட்டமாக்கி தேசிய கிராமப்புற சுகாதார இயக்கம் என்ற பெண் தொழிலாளிகளுக்காக நடத்துவோம்.கல்வியை வழங்குவதில் பின்தங்கி போவோம்.பிறகு அனைவருக்குமான கல்வி இயக்கம் என்று ஒரு திட்டத்தை உருவாக்கி அதில் பணத்தைத் கொட்டுவோம். அடிப்படையான சத்துணவு, குழந்தை பிறப்புக்கு முந்திய மற்றும் பிந்தைய பராமரிப்பு ஆகியவையும் பொதுவான பணிகளாக இருக்க வேண்டும். (பல நாடுகளில் அப்படித்தான் இருக்கின்றன). ஆனால், நாம் அவற்றை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமாக வைத்துள்ளோம். அந்த திட்டம்தான் உலகிலேயே பெரிய திட்டம் என்று பெருமைப்பட்டுக்கொள்ளவும் செய்வோம். (ஏனென்றால் வேறு எந்த நாடும் இதனை ஒரு திட்டமாக அறிவித்தது கிடையாது.) அதன் பிறகு அதற்கு பணம் ஒதுக்க மாட்டோம். உச்ச நீதிமன்றத்தின் கண்டனங்களுக்குப் பிறகும் இன்னமும் இந்தியாவின் எல்லா குழந்தைகளுக்கும் அந்த பராமரிப்புகள் கிடைக்காத நிலை உள்ளது. குறைவாக சம்பளம் வாங்கக் கூடியவர்களான பெண்கள், அவர்களின் வேலைகளுக்கான எந்த ஒரு பாதுகாப்போ உதவிகளோ இல்லாமல் இருக்கின்றனர். அவர்கள் தொழிலாளர்களாகக் கூட ஏற்கப்படவில்லை. ஒரு திட்டத்திற்கு தேவையான அளவு நிதி ஒதுக்காமல் அதனை மெல்ல சொட்டு சொட்டாக வடிவது போல ஒதுக்குவோம். அது நாம் எதிர்பார்த்த அளவு வெற்றிகளை தரவில்லை என்று ஆச்சரியப்படுவோம்.

இந்த உத்தேச பட்ஜெட்டில் இந்த வருடத்தின் குறைவாக திருத்தப்பட்ட மதிப்பீடுகளைவிட, திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் சிறிதளவு உயர்ந்துள்ளன. இந்த வருடத்தின் பட்ஜெட் மதிப்பீடுகளை ஒப்பிட்டால் எந்த ஒரு நிதி அதிகரிப்பும் காணப்படவில்லை. எனவே, உணவுக்கான மான்யம் என்பது மத்திய அரசு உணவு பாதுகாப்பு மசோதா வை கொண்டு வருவதற்கு திட்டமிட்டு இருந்தாலும் ஐயாயிரம் கோடி முதல் 90 ஆயிரம் கோடி ரூபாய் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்விக்கான செலவினமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருட பட்ஜெட் மதிப்பீட்டில் பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு என்பது வெறும் எட்டு சதவீதம்தான் அதிகம். இந்த வருடத்தில் உண்மையில் செலவானதில் 15 சதவீதம் அதிகம். உள்நாட்டு மொத்த உற்பத்தியில் அதன் பங்கு அதிகரிப்பது மிகவும் அரிதாக இருக்கும் என்பது இதன் அர்த்தம். ஆரோக்கியத்துக்கான செலவினத்திலும் இதே கதைதான். பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் அதிகரிப்பது திருத்தப்பட்ட உண்மையான செலவினத்தில் 28 சதவீதமாக இருக்கிறது. இந்த அதிகரிப்பை கடந்த வருட பட்ஜெட்டோடு

ஒப்பிட்டால் வெறும் எட்டு சதவீதம்தான். ஆரோக்கியம் போன்ற அத்தியாவசிய விஷயங்களில் கூட புதிதாக செலவு செய்ய அனுமதிக்கப்படுவது என்பது எப்படி இருக்கிறது என்பது காணக் கிடைக்கிறது. மிக முக்கிய திட்டமாக கருதப்படுகிற மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதி திட்டத்திற்கு 33000 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. அது கடந்த வருட அதே அளவு ஒதுக்கீடு. உயர்ந்துள்ள விலைவாசி உயர்வை கணக்கில் கொண்டால் இது முன்பிருந்ததை விட குறைவானதாகும். எல்லாவகையான பொதுப் பணிகளுக்கான செலவினங்களிலும் இத்தகைய ஒரு மட்டமான அணுகுமுறைதான் உள்ளது.

எரிபொருள் மான்யத்தை 30,000 கோடி ரூபாய்களுக்கு மேல் குறைத்ததன் மூலம் நிதி அமைச்சர் எல்லாவற்றையும் மோசமாக்கி இருக்கிறார். உலக எரிசக்தி விலைகள் அதிகரித்துகொண்டுதான் உள்ளன. இந்த நிலையில் இந்திய அரசு தனது குடிமக்களை அந்த உலக அளவிலான விலைகளை தரச்சொல்லி கட்டாயப்படுத்துகிறது. தனிநபர் வருமானத்தின் உலக சராசரியில் இந்தியரின் தனிநபர் வருமானத்தை ஒப்பிட்டால் அது மிக சிறிய அளவுதான் ஆனால் உலக அளவில் எரிபொருளுக்கு தரும் விலையை தரச்சொல்கிறது அரசு. (அரசின் சிந்தனையைப் பாருங்கள். நகர்புற இந்தியன் தினசரி 34 ரூபாய் சம்பாதித்தால் அவன் ஏழை அல்ல. ஆனால் அவன் அல்லது அவள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூபாய் 65.70 தரவேண்டும்). எரிபொருள் என்பது எல்லாவற்றுக்குமான இணைப்பாளராக இருப்பதால் அதன் விலையேற்றம் என்பது உணவு, போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் மற்றும் பணிகள் உள்பட எல்லாவற்றின் விலையையும் பாதிக்கிறது.

இது மூர்க்கத்தனமான நடவடிக்கை. இது மக்களின் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே போகும் போது அத்தியாவசிய பணிகள், பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகும் நிலைக்குக் கொண்டு வரும். வரும் மாதங்களில் அது தன் பாதிப்பைக் காட்டும். அதே நேரத்தில், நல்ல தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, சிறு தொழில்கள் மூலமாக பொருள்கள் உற்பத்தி செய்வது மற்றும் பணிகளை செய்வது ஆகியவற்றை உறுதிப்படுத்தல் ஆகிய விஷயங்களில் எதுவுமே செய்யப்படவில்லை. அதைப்பற்றிய சிந்தனை கூட இல்லாத நிலை உள்ளது. உண்மையான தொழிலாளர்களாக நடத்தப்படாத, குறைவாக சம்பளம் தரப்படுகிற பெண்கள் மூலமாக தனது அடிப்படையான, பொதுமக்களுக்கான பணிகளை செய்வது என்று அடம் பிடித்தது போல அரசு நடந்து கொள்கிறது. அப்படியானால் இந்தியப் பெண்கள் இந்த பட்ஜெட் மீது நல்ல முறையில் எப்படி பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

## சூரிய சக்தியுடன் பசுமை வீடு கட்ட மானியம்
## ரூ.2.10 லட்சமாக உயர்வு

பேரவையில் முதல்வர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் நேற்று படித்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2011ம் ஆண்டு ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினேன்.

இந்த திட்டத்தின்படி, சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு ஒவ்வொன்றும் ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் செலவில் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும். ஆண்டுக்கு 60,000 வீடுகள் என்ற அடிப்படையில் ஐந்து ஆண்டுகளில் 3 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்தேன்.அதன்படி, 2011–12ம் ஆண்டில் 60,000 வீடுகள் ரூ.1,080 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதேபோல், 2012–13ம் ஆண்டின் இலக்கான 60,000 வீடுகளில் இதுவரை 20,861 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் அனைத்தும் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு விடும். அனைத்து வீடுகளும் பயனாளிகள் மூலமே கட்டப்பட்டு வரு கின்றன.

இந்த சூழ்நிலையில், கட்டுமான பொருட்களான மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாக சூரிய சக்திக்கான சூரிய தகடு மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு ஆகும் செலவான, ரூ.30 ஆயிரம் நீங்கலாக, வீடு கட்டுவதற்கு அரசு நிர்ணயித்துள்ள அலகு தொகையான ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்தில் வீடு கட்டுவதற்கு சிரமமாக உள்ளது என்ற தகவல் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.பயனாளிகளின் வேண்டுகோளையும், உறுப்பினர்களின் கோரிக்கையையும் ஏற்று, ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளுக்கான அலகு தொகை 2013–14ம் ஆண்டு முதல் ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்தில் இருந்து ரூ.2 லட்சத்து 10 ஆயிரமாக உயர்த்தப்படும்.

இதேபோன்று, இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்ட அரசு நிர்ணயித்துள்ள ரூ.1 லட்சம் என்பது 2013–14ம் ஆண்டு முதல் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் என உயர்த்தி வழங்கப்படும். இதில் மத்திய அரசின் பங்கு தொகை ரூ.52 ஆயிரத்து 500 எனவும், மாநில அரசின் பங்கு தொகை ரூ.67 ஆயிரத்து 500 எனவும் இருக்கும் என்றார்.

**ஆதாரம்: தினகரன் 10.4.2013**

# காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், அடையாளச்சேரி ஊராட்சித் தலைவர் ஆதிலட்சுமி, பயனாளிகளுக்கு குடியிருப்பு வழங்குவதில் சந்தித்த பிரச்சனைகள்

ஆதிலட்சுமி முதன்முறையாக 2006ம் ஆண்டும், இரண்டாவது முறையாக 2011ம் ஆண்டும் ஊராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்–பட்டுள்ளார். 5ஆம் வகுப்பு வரை படித்துள்ள இவருக்கு சொந்தமாக ஒரு வீடும், 3 ஏக்கர் நிலமும் உள்ளது. கணவர் பெயர் நாராயணன். பி.யு.சி. வரை படித்துள்ள இவர் விவசாயம் செய்துகொண்டு அங்கன்வாடி பணியாளராகவும் இருக்கிறார். இவருக்கு 3 மகள்கள் மற்றும் ஒரு மகன். இதில் இரண்டு மகள்களுக்கு திருமணமாகி விட்டது. ஒரு மகள் கல்லூரியில் படிக்கிறார். மகன் 5 வருடங்களுக்கு முன் மின்சாரம் தாக்கி இறந்துள்ளான். தன்னுடைய சோகத்தை மறைத்துக்கொண்டு மக்களுக்கு பொதுத் தொண்டு செய்வதில் தன்னுடைய கவனத்தை திசை திருப்பிச் செயல்பட்டு வருகிறார். இவ்வூராட்சியானது குண்டுமணிசேரி, அடையாளச்சேரி, சமத்துவபுரம் ஆகிய மூன்று கிராமங்களை உள்ளடக்கியது.

இந்த ஊரில் உடையார், செட்டியார், வன்னியர், நாயுடு, கிராமினி, ஆச்சாரியர், பட்டியல் வகுப்பினர் என பல்வேறு சமூகத்தினர் வாழ்கிறார்கள். இங்கு வன்னியர் பெருமளவும் மற்ற வகுப்பினர் குறைவாகவும் உள்ளதால் அவர்களின் ஆதிக்கம்தான் பல பிரச்சனைக்குக் காரணமாக உள்ளது. இங்குள்ள மொத்த மக்கள் தொகை 1250. வாக்களிக்க தகுதியுள்ளவர்கள் 900 பேர். இதில் 30 ஆதிதிராவிடர் குடும்பங்களும், 4 பழங்குடியினர் குடும்பங்களும் உள்ளன. இங்கு 4 குளங்கள், ஒரு ஏரி, 5ஆம் வகுப்பு வரை உள்ள ஒரு ஆரம்பப்பள்ளி, நூலகம் ஆகியவை உள்ளன. 265 பொது விநியோக அட்டைகளை உள்ளடக்கிய 2 ரேஷன் கடைகளும், 5 தண்ணீர் தொட்டிகளும், 2 அடி பம்புகளும், 2 அங்கன்வாடிகளும் உள்ளன. MNREGA அட்டை 358 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இங்கு மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 6. இளங்கோ (வன்னியர்) துணை தலைவராகவும், ஜெய்சங்கர் (வன்னியர்), ஏழுமலை(வன்னியர்), உஷா (வன்னியர்), செல்லப்பன் (வன்னியர்) மற்றும் செந்தில் (நாயுடு) ஆகியோர் வார்டு உறுப்பினர்களாகவும் உள்ளனர். 2006ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தலில் போட்டியிட்டபோது இவரை எதிர்த்து கணேசன், சேகர் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் ஆதிலட்சுமி 152 வாக்குகளும் கணேசன் 150 வாக்குகளும், சேகர் 90 வாக்குகளும் பெற்றனர். அப்போது கணேசன் தகராறு செய்ததால் கலவரம் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் இவர்கள் மூன்று பேரின் பெயர்களை துண்டுச் சீட்டில் எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது. அதிலும் ஆதிலட்சுமியின் பெயரே வந்ததால், அவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த 2011 அக்டோபரில் நடந்த தேர்தலில் 100 வாக்குகள் வித்தியாசத்தில் 2வது முறையாக ஆதிலட்சுமி வெற்றி பெற்றார். இந்த கிராமத்தில் படித்தவர்கள் 40 சதவீதம் பேர் மட்டுமே. மற்றவர்கள் விவசாயம், கூலி வேலை செய்கின்றனர். MNREGA மூலம் குளம் உருவாக்கப்பட்டுள்ளது. குளம், ஏரி, வாய்க்கால் தூர்வாரப்பட்டுள்ளது. மண் சாலை போடப்பட்டுள்ளது.

கடந்த 2006ம் ஆண்டிலிருந்து தற்போது வரை பல ஆக்கிரமிப்புகளை அகற்றி சமத்துவபுரமும் கட்டப்பட்டுள்ளது. மலை மேட்டுத் தெரு உருவாக்கியது, உழவர் சந்தை உருவாக்கியது, தண்ணீர் தொட்டிகள் கட்டியது, குளம் வெட்டியது, நீர் நிலைகளை சுத்தப்படுத்தி நீர் ஆதாரத்தை பெருக்கியது, விளையாட்டு மைதானம், தெருவோரமாக வசிக்கும் மக்களுக்கு இருப்பிட வசதி செய்து கொடுப்பது, அவர்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பது, MNREGA மூலம் வேலை உறுதி அட்டை வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்தியது மற்றும் ஊராட்சியில் புறம்போக்கு நிலங்களை இனம் கண்டு அதில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தது என பல பல நன்மைகளை ஆதிலட்சுமி செய்துள்ளார்.

இதனால் சில ஆதிக்க சாதியினரின் கடும் எதிர்ப்புகளை சந்தித்து போராட்டத்துடன் ஊராட்சியை நடத்தி வருகிறார். இது குறித்து ஆதிலட்சுமி கூறியதாவது, நான் முதன் முதலாக 2006 – 2011 ஆண்டுகளில் அடையாளச்சேரி ஊராட்சியில் தலைவராக இருந்தேன். என் ஊராட்சியை சேர்ந்த மக்களுக்கு நான் குன்றுப்புறம்போக்கில் ஓலைவீடு கட்டிக் கொடுத்தேன். இதற்கு பயனாளிகளாக ஆதிதிராவிடர், முதலியார், செட்டியார், நாயக்கர் ஆகிய சமுதாய மக்களை குடியமர்த்தினேன். 2006ஆம் ஆண்டிலிருந்து இம்மனைகளுக்கு பட்டா வாங்குவதற்கு

முயற்சி செய்தேன். வட்டாட்சியரை சந்தித்தும் மனு கொடுத்திருக்கிறேன். இதுவரையிலும் பட்டாவும் தரவில்லை, உரிய பதிலும் தரப்படவில்லை. மலைமேட்டுத் தெருவில் இம்மக்களுக்காக கோவிலைக் கட்டினேன். தெருக்கள் அமைத்தேன். அந்த தெருச் சாலையை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் (MNREGA) பணியாளர்களை வைத்து சீரமைத்தேன். என் பஞ்சாயத்திற்கு சொந்தமான 11 ஏக்கர் 10 சென்ட் நிலத்தை எல்லப்பன், ஆறுமுக ஆச்சாரி, காளி ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். கூடுதல் ஆட்சியர் மூலமாக இந்த ஆக்கிரமிப்பை அகற்ற மனு கொடுத்திருக்கிறேன். 2007ஆம் ஆண்டு குண்டுமணிச்சேரி கிராமத்தில் 24 பேருக்கு வீட்டுமனைப் பட்டா பெற்றுக் கொடுத்தேன்.

அதன்பிறகு மீட்டெடுக்கப்பட்ட 11 ஏக்கர் நிலத்தில் சமத்துவபுரம் அமைத்துக் கொடுக்க அப்போதைய திமுக ஆட்சியில் உள்ளாட்சித்துறை மந்திரியாக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தேன். என் ஊராட்சிக்கு சமத்துவபுரம் அமைக்க அனுமதி கொடுத்து ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதன்படி சமத்துவபுரம் அமைக்க உத்தரவிட்டார். இந்த சமத்துவபுரத்திற்கு பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு மாவட்ட கூடுதல் ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள சமூகத்தினரை தேர்வு செய்தனர். அதில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 25, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 25, ஆதி திராவிடர் 7 ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சமத்துவபுரத்தில் மொத்தம் 100 வீடுகள் கட்டப்பட்டன. ஒரு நியாயவிலைக் கடையும் அமைக்கப்பட்டது.

மீதமுள்ள 33 வீடுகளுக்கு பரமேஸ்வரமங்களம், நெற்குணம்பட்டு, கீழர்கொள்ளை ஆகிய கிராமங்களிலிருந்து மொத்தம் 90 குடும்பங்கள் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்பட்டன. பிற வகுப்பினருக்காக (OC) ஒதுக்கப்பட்ட 10 வீடுகளுக்கு அப்போது தகுதியான பயனாளிகள் இல்லாததால் தேர்வு செய்யப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட 90 நபர்களுக்கு 27.02.2011 அன்று அமைச்சராக இருந்த தா.மோ. அன்பரசன் அவர்களால் சாவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அன்றைய தினம் 5 குடும்பங்களுக்கு மட்டும்தான் சாவிகள் வழங்கப்பட்டன. மீதமுள்ள 85 குடும்பங்களுக்கு அப்போதைய MLA காயத்ரிதேவி மற்றும் இலத்தூர் ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த ராமச்சந்திரனிடம் சாவியை வழங்குமாறு கூறிவிட்டு வேறொரு விழாவிற்கு அமைச்சர் சென்றுவிட்டார். ஆனால் இவர்கள் 85 பயனாளிகளுக்கும் சாவி கொடுக்க காலம் கடத்தினர். அதற்குள் தேர்தலும் வந்துவிட்டது. 25.10.2011 அன்று இரண்டாவது முறை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதன்பின் மாவட்ட ஆட்சியருக்கு வீட்டுச்சாவி கொடுத்த விஷயத்தை எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தேன், எந்தப் பயனும் இல்லை. அதன் பிறகு உயர்நீதிமன்றத்தை நாடினேன். வழக்கு தொடர்ந்தேன். ஊராட்சியின் மூலமாக தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சாவி வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பும் வழங்கியது. அதனடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து சாவி கொண்டு வரப்பட்டது. மொத்தம் 85 சாவி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் BDO அலுவலகத்திலிருந்து வந்தவர்கள் 69 சாவிகளை மட்டுமே கொடுத்தார்கள். மீதமுள்ள 16 சாவிகளை இப்போதைய MLA ராஜு (அதிமுக செய்யூர் தொகுதி) நிறுத்தி வைக்கச் சொன்னார் என்று கூறினார்கள். இந்தப் பிரச்சனைக்காக எவ்வளவோ போராடினேன்.

ஆனால் MLA & BDO ஆகியோர் உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கூட மதிக்கவில்லை. இந்தத் தகவலையும் நான் மாவட்ட ஆட்சியரிடம் எழுத்துப்பூர்வமாக தெரிவித்தேன். பாதிக்கப்பட்ட 16 பயனாளிகளும் மக்கள் குறை தீர்ப்பு நாளில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுத்தனர். நானும் மனு கொடுத்தேன். இதுவரை எந்தப் பதிலும் இல்லை. மேற்படி 16 வீட்டையும் பெற்றுத் தரும்வரையில் தலைமுடியைக்கூட வெட்டுவதில்லை என்று முடிவெடுத்தேன். வீட்டை மீட்டெடுப்பது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரை மீண்டும் சந்திக்க உள்ளேன். புளிய மரத்தடியில் கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் இருந்த பூம்பூம்மாட்டுக்காரர்கள், நாடோடி மக்கள் மற்றும் பழங்குடியின மக்களை சமத்துவபுரத்திற்கு நேர் எதிரே உள்ள கல்லாங்குத்து புறம்போக்கை தேர்வு செய்து 24 வீடுகளைக் கட்டிக் கொடுத்தேன். ஆதிக்க சாதியினர் இந்த வீடுகளை எல்லாம் எரித்தார்கள். இந்த வீட்டிலிருந்த மக்களைத் துரத்தினார்கள். இந்த மக்களெல்லாம் மீண்டும் புளியமரத்தடியில் வந்து இருக்கிறார்கள். இவர்களுக்கு MNREGA, பணிக்கான அட்டை வழங்கி வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தேன். இவர்களுடைய பிள்ளைகளை பள்ளியில் சேர்த்துள்ளேன்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் அப்போதைய அரசு சுடுகாடு அமைக்க 3.85 லட்சம் வழங்கியது. இதை அமைக்க இடத்தை தேர்வு செய்யும்போது அந்த மயான இடத்தில் சடையாண்டி என்பவர் வீடுகட்டி ஆக்கிரமிப்பு செய்திருந்தார். இதை அகற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் அன்றைய வட்டாட்சியராக இருந்த திரு. லோகநாதன் என்பவரிடம் மனு கொடுத்தேன். அவர் நோட்டீஸ் விடுவார். ஆக்கிரமிப்பு

அகற்றும் தேதியில் வட்டாட்சியர் திரு. லோகநாதன் அவர்கள் மாவட்ட ஆட்சியரை சந்திப்பதாக பொய் நாடகம் ஆடி ஆக்கிரமிப்பாளருக்கு சாதகமாக தலைமறைவாக இருந்து விடுவார். இதனால் ஆக்கிரமிப்பாளரான சடையாண்டி, வட்டாட்சியர் லோகநாதன் ஆகியோர் மீது (WP of 2010) நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தேன். அதன்பிறகு வட்டாட்சியர் உயர் நீதிமன்றத்தில் மன்னிப்புக் கேட்டார். இறுதியாக ஊராட்சிக்கு சாதகமாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தை ஊராட்சியிடம் ஒப்படைக்க உத்தரவிட்டது. ஆனால் இந்நாள் வரை ஒப்படைக்கவில்லை. அதே அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலமாக விளையாட்டுத் திடல் அமைக்க ரூ.1 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டது. ஊராட்சித் தலைவராகிய நான் தேர்வு செய்த இடத்தில் பரந்தாமன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்.

இந்நிலையில் விளையாட்டுத் திடல் அமைக்க இடத்தை அளந்துவிடச் சொல்லி வட்டாட்சியர் லோகநாதன் அவர்களிடம் மனு கொடுத்தேன். மாவட்ட ஆட்சியருக்கும் மனு கொடுத்தேன். விளையாட்டுத் திடல் அமைக்க இடத்தை அளந்துவிடாத காரணத்தினாலும் மயான இடத்தை இடுகாடு அமைக்க ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றாத காரணத்தினாலும் 10.5.2010 அன்று தலைவர் பதவியை ராஜினாமா செய்தேன். ஏன் இப்படி செய்தீர்கள் என்று BDO அலுவலகத்தில் அதிகாரிகள் கேட்டார்கள். உடனடியாக வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் முயற்சியினால் அன்று மாலையே விளையாட்டுத் திடல் அமைக்க இடம் அளந்துவிட்டார்கள். மயான ஆக்கிரமிப்பையும் 10 நாட்களில் அகற்றுவதாகக் கூறினார்கள். மயானம் அமைக்க வழி செய்வதாகவும் கூறினார்கள்.

10.5.10 அன்று மாலையே 4 மணி அளவில் பதவி விலகல் கடிதத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளச் சொன்னார்கள். அதன்படி பதவி விலகல் கடிதத்தை பெற்றுக்கொண்டு தொடர்ந்து தலைவராக இருந்தேன். மீண்டும் தலைவராக வந்து இருக்கிறேன். இதுவரையிலும் காலி செய்யவில்லை. அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்போடு ஊராட்சிக்கு சொந்தமான மயானத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சடையாண்டி, ஆக்கிரமித்த இடத்திற்கு வீட்டுவரி ரசீது கேட்டு WNO 5492 / 2012 என்ற பிரிவில் உயர்நீதிமன்றத்தில் தற்போது வழக்கு தொடர்ந்துள்ளார்.

**– ஆய்வு மற்றும் அறிக்கை தொகுப்பு:**
**மனித வள மேம்பாட்டு நிறுவனம் (HRDF) &**
**மனித உரிமை மேம்பாடு மற்றும்**
**ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

## ஊரக வளர்ச்சி மானிய கோரிக்கை முக்கிய அம்சங்கள்

சட்டசபையில், தாக்கல் செய்யப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, மானியக் கோரிக்கையில் நூறு நாள் வேலைத் திட்டம் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கல்ல புதிய பணிகள் இடம் பெற்றுள்ளன.

### அவை விவரம்:

- நூறு நாள் வேலை திட்டத்தில், கடற்கரையோரம் உள்ள கிராம ஊராட்சிகளில், உப்பு நீரைத் தாங்கி வளரும் மரங்கள் வளர்க்கப்படும். சுகாதாரப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.
- தனி நபர் இல்லங்களில் கழிப்பறை கட்ட, மாநில அரசின் பங்குத் தொகை, 2,500 ரூபாயாக அதிகரிப்பு.
- கிராமங்களில் திட மற்றும் திரவ கழிவுகளை சேகரிக்க, எருக்குழிகள் அமைக்கப்படும்.
- 10 லட்சம் ரூபாய் மதிப்புக்கு அதிகமான டெண்டர்களை, மின் ஒப்பந்தப் புள்ளியாக சமர்ப்பிக்க வேண்டும்.
- கிராமங்களில் புதுப்பிக்கப்படும் சாலைகள் விவரம், இணையதளத்தில் பதிவு செய்து, தொடர்ந்து கண்காணிக்கப்படும்.
- உள்ளாட்சிப் பணியாளர்கள் பதவி உயர்வுக்கு, அடிப்படை பயிற்சி முடித்திருப்பது கட்டாயம்.
- மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் மூலம், பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**ஆதாரம்: தினமலர், 2.4.2013**

# விவசாயிகளின் தற்கொலை விகிதாச்சாரம் மற்றவர்களைவிட மிக அதிகமாக இருக்கிறது.

– சாய்நாத்

**மும்பை**

இந்திய விவசாயிகள் மத்தியில் தற்கொலைகள் அபாயகரமாக அளவில் நடந்துள்ளன. 2011 ல் அவர்களின் எண்ணிக்கையை விட 47 சதவீதம் அதிகமாக அவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சில மாநிலங்கள் மோசமாக விவசாய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கே எல்லாம் தற்கொலை விகிதம் 100 சதவீதத்துக்கும் மேலாக இருந்துள்ளது. விவசாய மக்களின் எண்ணிக்கை சுருங்கி வருவதை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது. அவ்வாறு குறைக்கப்பட்ட எண்ணிக்கையில் இருக்கிறவர்களிடையே தான் தற்போது தற்கொலைகள் நடந்து வருகின்றன.

புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு விபரங்களை நாம் தேசிய குற்ற பதிவேடுகளுக்கான அமைப்பின் தற்கொலை விபரங்களோடு சம்பந்தப்படுத்தி பார்த்தால் அதன் விளைவுகள் கொடுமையாக இருக்கின்றன. உதாரணமாக, நாட்டில் தற்கொலை செய்து கொள்பவர்களில் விவசாயிகள் அல்லாதவர்களை விட மூன்று மடங்கு அதிகமாக ஆந்திராவில் உள்ள ஒரு விவசாயி தற்கொலை செய்து கொள்கிறார். அவரது சொந்த மாநிலத்தில் விவசாயி அல்லாதவர்கள் தற்கொலை செய்து கொள்வதைவிட இது இரண்டு மடங்கு அதிகம்.மகாராஷ்ட்ரத்திலும் நிலைமைகள் அப்படி ஒன்றும் நன்றாக இல்லை. பத்தாண்டு காலமாகவே இந்த மாதியான தற்கொலைகளால் மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலமாகவே அது நீடிக்கிறது.

"நிலைமை மிக மோசமானதாகவே நீடிக்கிறது"என்கிறார் பேராசிரியர் நாகராஜ். அவர் ஆசியன் ஜர்னலிஸ்ட் காலேஜில் பொருளாதார அறிஞராக உள்ளார். இந்தியாவில் நடைபெறுகிற விவசாயிகளின் தற்கொலைகள் பற்றி அவர் 2008ல் எடுத்த ஆய்வு என்பது மிக முக்கியமான ஆவணமாக இன்னமும் இருக்கிறது. "எவ்வளவு அதிகமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பது உண்மையில் எந்த விதத்திலும் குறையாமல்தான் இருக்கிறது" என்கிறார் அவர். "எந்த ஒரு எண்ணிக்கையும் பெரிய அளவில் தற்கொலைகள் குறைந்து விட்டன என காட்டவில்லை. விவசாயத்தின் இதயம் போன்ற பகுதிகளான ஐந்து மாநிலங்களில் தற்கொலைகள் அதிகமாகவும் அடிக்கடியும் நடக்கின்றன.அங்கே விவசாய நெருக்கடி தொடர்கிறது. 2011ல் விவசாயிகளின் சரிக்கட்டப்பட்ட தற்கொலைகளின் எண்ணிக்கை என்பது 2001ல் நடந்த தற்கொலைகளை விட கொஞ்சம் அதிகமே" என்றார் அவர். மாநில அளவில் இந்த தற்கொலை விபரங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு திருத்தி குறைத்து காட்டும் முயற்சிகளுக்கு பிறகும் இதுதான் நிலை.

தேசிய குற்ற பதிவேடுகள் அமைப்பு தரும் விபரங்களின் படி நாட்டில் நடக்கிற மொத்த விவசாய தற்கொலைகளில் மூன்றில் இரண்டு பங்கு தற்கொலைகள் மேலே சொன்ன ஐந்து மாநிலங்களில் தான் நடக்கின்றன. அவை மகாராஷ்ட்ரா, ஆந்திரா, கர்நாடகா, மத்தியபிரதேசம் ,சத்தீஷ்கர் ஆகும். நாட்டில் நடக்கிற மொத்த விவசாயிகள் தற்கொலைகளில் இந்த ஐந்து "பெரிய" மாநிலங்களில் நடக்கிற தற்கொலைகளின் பங்கு என்பது 2001ல் இருந்ததைவிட 2011ல் அதிகம். அதே நேரத்தில் புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இந்த நான்கு மாநிலங்களில் பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட விவசாயிகள் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்பதை காட்டுகின்றன. மகாராஷ்ட்ரா மட்டும்தான் தனது எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக சொல்லியிருக்கிறது.

விவசாயிகளின் தற்கொலை விகிதம் என்பது (வி.த.வி.) தேசிய அளவில் ஒரு லட்சம் விவசாயிகளுக்கு 16.3 ஆக 2011ல் இருந்தது. இது விவசாயிகளாக இல்லாதவர்கள் தற்கொலை செய்து கொள்கிற விகிதமான 11.1 ஐ விட மிகவும் அதிகம். 2001ல் விவசாயிகளின் தற்கொலை விகிதம் 15.8 ஆக இருந்து. அதைவிட கொஞ்சம் அதிகம்.

உதராரணமாக, மகாராஷ்ட்ரா வில் உள்ள பிராதானமாக விவசாயத்தை மட்டுமே செய்யக் கூடியவர்களாக இருக்கிற விவசாயிகளில் லட்சம் பேருக்கு 29.1 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இது இந்தியாவில் விவசாயிகள் தவிர்த்த மற்றவர்கள் செய்து கொள்கிற தற்கொலைகளை விட 160 சதவீதத்துக்கு மேலாக அதிகம். மற்ற மாநிலங்களிலும் இத்தகைய தற்கொலை விகித இடைவெளிகள் இருக்கவே செய்கின்றன. 22 மாநிலங்களில் 16ல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் விகிதம் என்பது) மீதம் இருக்கிற மக்கள்தொகையில் நடக்கிற தறிகொலைகளின் விகிதத்தை டிவட அதிகமாக 2011 கணக்குகளின்படி

இருக்கிறது. 2011க்கான தகவல்கள் மோசமான முறையில் மாநிலங்களால் திரித்து கூறப்படுக்ன்றன. 2011ல் ஒரு விவசாயி கூட தற்கொலை செய்ய வில்லை என சத்தீஸ்கர் மாநிலம் சொல்கிறது. அந்த வருடத்தில் நடந்த தற்கொலைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது இருப்பதாக அதே மாநிலம் கூறுகிறது. ஆனால்அதில் ஒருவர் கூட விவசாயி இல்லை என்கிறது.

2011க்கு முன்னததாக மூன்று வருடங்களாக நடந்துள்ள தற்கொலைகளின் சராசரியை நாம் எடுத்துக் கொண்டாபல் என்னவாகும்? அப்போது சத்திஸ்கரின் விவசாயிகளின் தற்கொலை சதவீதம் என்பது நாட்டின் மீதம் இருக்கிற மக்கள் தொகையில் நடக்கிற தற்கொலைகளின் சதவீதத்தைவிட 350 சதவீதத்துக்கு மேலாக இருக்கும். இந்தியாவில் 1995ல் நடந்த விவசாய தற்கொலைகளில் பாதிக்கும் மேலானவை இந்த "பெரிய" மாநிலங்களில் மட்டும் நடந்தன. 2011ல் நடந்த தற்கொலைகளில் மூன்றில் இரண்டு பங்கு இந்த மாநிலங்களில் தான் நடந்தன. இத்தகைய விபரங்களை பார்த்தால்அனைத்து இந்திய அளவில் நடக்கிற புள்ளி விபரங்கள் காட்டுகிற துன்பங்களை விட இந்த மாநிலங்களில் நிலைமைகள் மோசமான உள்ளன.

2001 நடந்த விவசாயத் தற்கொலைகளை விட 2011ல் 10 மாநிலங்களில் அதிகமான தற்கொலைகள் நடந்துள்ளன. இது பெரிய அளவிலான விவசாய மண்டலங்களான பஞ்சாப்பும் அரியானாவும் அதில்அடக்கம். "பெரிய ஐந்து மாநிலங்களில்" நடக்கிற சராசரி விவசாயி தற்கொலைகளின் விகிதம் கொஞ்சம் அதிகரித்துள்ளது. ஆனால் கர்நாடகாவில் மட்டும் கொஞ்சம் குறைந்துள்ளது. மகாராஷ்ட்ரா விலும் கொஞ்சம் குறைந்துள்ளது. மகாராஷ்ட்டிரா எந்த ஒரு மாநிலத்தையும் விட இந்த விசயத்தில் மோசமான நடத்தையை கொண்டுள்ளது. 1995ஆம் ஆண்டில் இருந்து 53,818 தற்கொலைகள். ஆனால் தற்போது அது எப்படி குறைவான தற்கொலை விகிதத்தை காட்டுகிறது? நல்லது.

2001ல் இருந்து 12 லட்சம் பிரதான விவசாயிகள் தனது மாநிலத்தில் அதிகரித்து இருப்பதாக 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் அது கூறுகிறது. மாறாக, ஆனால் தேசிய அளவில் இதே காலகட்டத்தில் 77லட்சம் பேர் குறைந்துள்ளனர். அதனால் மகாராஷ்ட்டிரா விவசாயிகள் தற்கொலைகளில் ஒரு வீழ்ச்சி காட்டுகிறது. இன்னமும்கூட தற்கொலை செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்துவிடவில்லை. இன்னமும் இந்த மாநிலத்தில் உள்ள ஒரு விவசாயி நாடு முழுவதும் உள்ள விவசாயி அல்லாத மனிதன் தற்கொலை செய்து கொள்வதை விட இரண்டரை மடங்கு அதிகமாக தற்கொலை செய்து கொள்கிறான். 2011 புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பிளுள்ள விவசாயிகள் எண்ணிக்கையோடும், தேசியக் குற்றப்பதிவேடுகள் அமைப்பின் விவசாயிகள் தற்கொலைகளின் எண்ணிக்கையையும் சேர்த்து இந்த விவசரங்கள் பெறப்பட்டுள்ளன. மக்கள் தொகை கணக்கெடுப்பு விவசாயிகளைப் பதிவு செய்கிறது. காவல்துறை தற்கொலைகளைக் கணக்கெடுக்கிறது. மாநில அரசுகளும் காவல்துறையும் தற்கொலைகளைப் பட்டியலிடும்பொழுது இறந்தவரின் பெயரில் நிலம் இருந்தால் மட்டுமே அவரை விவசாயி எனப் பதிவு செய்கின்றனர்.

"ஏராளமான எண்ணிக்கையில் இன்னமும் விவசாயிகள் தற்கொலைகள் நடக்கின்றன என்கிறார் பேராசிரியர் நாகராஜ். அதிகாரப்பூர்வமாகவும், அரசியல் ரீதியாகவும் அங்கீகரக்கப்படாததாக இந்த தற்கொலைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்தச் செயலுக்குப் பின்னால் மௌன சதி ஏதாவது இருக்கிறதா?"

சட்டீஸ்கர் மாநிலம், தங்கள் மாநிலத்தில் எந்த ஒரு விவசாயிகள் தற்கொலைகளும் நடக்கவில்லை என்று அறிவுப்பு செய்ததில் மனதை சங்கடப்படுத்தக்கூடிய ஒரு போக்கு இருக்கிறது (ஒரு விவசாயி கூட தற்கொலை செய்துகொள்ளவில்லை என்று அறிவிப்பதற்கு முன்பான 36 மாதங்களில் 4,700 பேர் தற்கொலை செய்திருக்கிறரார்கள் என்பதைத் தவிர்த்து). புதுச்சேரியும் இதே வழியைப் பின்பற்றுகிறது. சந்தேகமில்லாமல் மற்றவர்களும் இதையே தான் செய்வார்கள். பஞ்ஜாபும் ஹரியானாவும் பல வருடங்களாக தங்கள் மாநிலங்களில் பெண் விவசாயிகளின் தற்கொலைகள் நடக்கவேயில்லை என்று கூறிக் கொள்கின்றன (ஆய்வு விவரங்களும், ஊடகங்களின் விவரங்களும் இதே வருடங்களில் வேறுவிதமாக இருந்தாலும்). இந்த போக்கு ஏதோ ஒருக்கட்டத்தில் தரவுகளை மிக மோசமாக சீர்குலைக்கிறது.

தேசியக் குற்றப்பதிவேடுகளின் அமைப்பின்படி 1995 முதலாக, குறைந்தது இரண்டு லட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது (2,70,940) இந்திய விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 1995–ல் இருந்து 2000க்கு இடைப்பட்ட 6 ஆண்டுகளில் வருட சராசரியாக 14,492 விவசாயிகள் தற்கொலைகள் நடந்துள்ளன.

2001ல் இருந்து 2011க்குள் இடைப்பட்ட 11 ஆண்டுகாலத்தில் வருட சராசரியாக 16,743 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இது சராசரியாக தினமும் 46 விவசாயிகள் தற்கொலை செய்கின்றனர் என்று எடுத்துக்கொள்ளலாம் அல்லது ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ஒரு விவசாயி தற்கொலை செய்துகொள்கிறார் என்றும் வைத்துக் கொள்ளலாம்.

**ஆதாரம்: THE HINDU, MAY 18, 2013**

# தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணிகள் அதன் பயனாளிகளால் சமூகத் தணிக்கை செய்யப்படவுள்ளது




| ஆண்டு | வேலை அளிக்கப்பட்ட வீடுகள் | பெண்கள் (%) | தலித் / பழங்குடிகள் (%) | 100 நாட்கள் பணி முடித்த வீடுகள் (%) | Person days generated (லட்சத்தில்) | (%) | வேலைக்–கான நிதி (கோடிகளில்) | செலவு (கோடிகளில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2005–06 | 23,141 | 41 | 25 | N.A. | 2.29 | N.A. | N.A. | 3 |
| 2006–07 | 6,83,481 | 81 | 58 | N.A. | 182.87 | N.A. | N.A. | 151.64 |
| 2007–08 | 14,18,825 | 82 | 61 | 0.77 | 642.99 | 84 | 615 | 516.42 |
| 2008–09 | 32,56,419 | 78 | 62 | 6.39 | 1,203.60 | 56 | 1,722 | 1,005.15 |
| 2009–10 | 40,04,871 | 83 | 62 | 8.84 | 2,391.75 | 82 | 1,963 | 1,762.37 |
| 2010–11 | 44,13,124 | 83 | 58 | 11.29 | 2,685.63 | 93 | 2,895 | 2,294.08 |
| 2011–12 | 58,16,369 | 83 | 59 | 14.08 | 3,205.99 | 110 | 3,572 | 2,932.52 |
| **2012–13** | **55,47,170** | **84** | **56** | **4.66** | **3,047.11** | **80** | 5,002 | **3,109.91** |

N.A. – தகவல் கிடைக்கவில்லை – 2013 ஜனவரி 23 வரை; வேலை அளிக்கப்பட்ட வீடுகள் – 2012 டிசம்பர் 31 வரை

*ஆதாரம்: மாநில ஊரக வளர்ச்சித் துறை ஆணையரகம்*

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகள் அந்தப் பணிகளின் சமூகத் தணிக்கையில் ஏப்ரல் 1 முதல் ஈடுபட உள்ளார்கள். பிரச்சனை ஏதும் வராமல் இருப்பதை உறுதி செய்ய அவர்கள் தங்களது ஊராட்சி அல்லாத பிற ஊராட்சிகளில் இந்த திட்டப் பணிகளின் சமூகத் தணிக்கையில் ஈடுபடுவார்கள். ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் 8வது வரைப் படித்த 5 நபர்கள் கிராம அளவிலான வல்லுநர்களாக (சமூகத் தணிக்கை செய்வதற்கு) இருப்பார்கள். அத்தகைய நபர்கள் மொத்தமாக 62,620 பேர் இருப்பார்கள். அவர்களுக்கு போக்குவரத்து உள்ளிட்ட பிற செலவுகள் தவிர்த்து ஒரு வருடத்தில் 5 நாட்களுக்கான ஊதியம் வழங்கப்படும்.

இத்தகைய கிராம அளவிலான வல்லுநர்கள் கண்டறிந்தவை கிராம சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். 12, 524 கிராம ஊராட்சிகளிலும் இந்த சமூகத் தணிக்கை தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்தின் ஆதரவின் கீழ் நடைபெறும் (SASTA). இந்த அமைப்பு, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள சமூகத் தணிக்கை, பொறுப்புடைத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மைக்கான சங்கத்தை மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சுதந்திரமாக செயல்படும் ஒரு அமைப்பாகும். தமிழ்நாடு சமூகத் தணிக்கை சங்கத்திற்கான விதிகள் ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ளது, அதற்கான அறிவிப்பாணை எந்த நேரமும் வெளிவரலாம் என்று அலுவலக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தில் நான்கு அரசாங்க அலுவலர்கள் மட்டுமே இருப்பார்கள். சமூக தணிக்கை வல்லுநர், மாநில அளவிலான கண்காணிப்பாளர்கள் மாவட்ட அளவிலான வல்லுநர்கள் மற்றும் ஒன்றிய அளவிலான வல்லுநர்கள் ஆகியவர்கள் வெளி நபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களின் பணி நியமனம் கூடிய விரைவில் செய்யப்படும்.

### அரசு ஊழியர்களுக்கு எதிராகத் தனிநபர் கூறும் புகார்களை விசாரிப்பதற்கு என நியமிக்கப்பெற்ற அதிகாரி (ombudsman)

இதுவரை கிராம ஊராட்சியிலிருந்து 6 நபர்கள் கொண்ட குழுவால் அவர்களது சொந்த ஊராட்சியில் நடைபெறும் ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் குறித்து சமூகத் தணிக்கை செய்யப்பட்டது. குறைகள் தீர்ப்பதற்காக, 23 மாவட்டங்களுக்கு அரசு ஊழியர்களுக்கு எதிராகத் தனிநபர் கூறும் புகார்களை விசாரிப்பதற்கு என நியமிக்கப்பெற்ற அதிகாரிகள் **(ombudsmen)** 11 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 3 மாவட்டங்களில் 2 ஆம்பட்ஸ்மன் பதவி காலியாக உள்ளது. இன்னும் 7 ஆம்பட்ஸ்மென் பதவிக்கு ஆட்கள் நியமிக்கப்பட வேண்டும். புகார்களைப் பெறுவதற்கென்றே ஒரு இலவச தொலைபேசி சேவை (1299) ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆதாரம்: *The Hindu, 6.2.2013***

*For Private Circulation Only*

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, மனித வள மேம்பாட்டு நிறுவனம், CRDS, இணைந்து ஒருங்கிணைத்த 2011ல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்ட பெண் மற்றும் தலித் உள்ளாட்சித் தலைவர்களுக்கான பாராட்டு விழாவில் பிரதிநிதிகள்



HRARF, LAW Trust, SIRD, WAVES, TN Science Forum, FEDCOT, CREATE, PALAM ஆகிய அமைப்புகளின் ஆதரவோடு தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு 04.08.2012 அன்று ஒருங்கிணைத்த திருவாரூர் மாவட்ட ஊராட்சி அரசாங்கத் தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் மாநாடு



*கல்விச் சாதனம் வெளியீடு*

## தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு
## தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்
## தமிழ்நாடு தலித் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு

ஆகியவற்றிற்காக


**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா

தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905,

மின்அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com

இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org